# புதிய ஜனநாயகம்

மே 2017
ரூ. 15.00



## திருடன் - போலீசா, திருட்டு போலீசா?




## தமிழகமெங்கும் டாஸ்மாக் உடைப்புப் போராட்டங்கள்:

# அடித்தாலும் அடங்காது, இது வேற தமிழ்நாடு!

திருப்போரூரை அடுத்துள்ள ஆலத்தூரில் டாஸ்மாக் கடைக்காகக் கட்டப்பட்டு வந்த கட்டிடத்தை இடித்துத் தள்ளும் பொதுமக்கள்.



சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர்-பூந்தண்டலம் கிராமத்தில் டாஸ்மாக் கடை அமையவிருந்த கட்டிடத்தை இடித்துத் தள்ளும் பெண்கள்.



கடும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் திருப்பூர் ஆத்துப்பாளையம் பகுதியில் குடிநீர் தருவதற்கு ஏற்பாடு செய்யாத அதிகார வர்க்கம், புதிய டாஸ்மாக் கடையைத் திறக்க முயன்றதைக் கண்டித்து நடந்த சாலை மறியல் போராட்டம்.



தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 32 இதழ்: 7
மே 2017

தனி இதழ்: ரூ. 15.00
ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com
தொலைபேசி: 94446 32561

# திருடன்-போலீசா, திருட்டு போலீசா?

போலீசின் உண்மையான முகத்தைப் புரிய வைக்கும் ஆற்றல் கிரிமினல்களுக்குத் தான் உண்டு. தாங்கள் அரும்பாடுபட்டுத் திருடிக் கொண்டுவந்த நகையை, போலீசார் தங்களிடமிருந்து திருடிவிடாமல் காப்பாற்றுவதற்குத் திருடர்கள் படும் பாடு கொஞ்ச மல்ல. இருந்தாலும், நூறு பவுன் திருடியிருந்தால், அதில் 50 பவுனை போலீசு பிடுங்கிக் கொள்ளும். 25 பவுனைத் திருடனுக்கு ஊதியமாகக் கொடுத்துவிட்டு, மீதி 25 பவுனை மேசையின் மீது பரப்பி வைத்து, புகைப்படம் எடுத்துக்கொண்டு மக்களிடம் நற்பெயர் ஈட்டுவார் புலனாய்வு அதிகாரி. கடந்த சில மாதங்களாகத் தமிழகத்தில் அரங்கேறி வரும் வருமானவரித்துறை சோதனைகள் கைதுகள், "திருடன் - போலீசு கதை"யைத்தான் அப்படியே பிரதிபலிக்கின்றன.

எடப்பாடி, நத்தம், பன்னீரின் பினாமிகள், சைதை துரைசாமி, பிறகு சட்டமன்றத் தேர்தலின்போது அன்புநாதன், கன்டெயினர்கள், ஜெயா மரணத்துக்குப் பின் ராம மோக னராவ், சேகர் ரெட்டி, விஜயபாஸ்கர், கீதாலட்சுமி, தினகரன் என்று வரிசையாக நடந்து வரும் ரெய்டுகள், போலீசின் மாமூல் வேட்டை நடவடிக்கையை அப்படியே பிரதிபலிக் கின்றன. இந்த வேட்டையில் பா.ஜ.க.வினரும் அதிகார வர்க்கமும் மிரட்டிப் பிடுங்கியது எவ்வளவு என்பது திருடர்களுக்குத்தான் வெளிச்சம். "சேகர் ரெட்டியிடமிருந்து கைப் பற்றப்பட்ட டயரியில் எழுதப்பட்டிருக்கும் குறிப்புகளில் உள்ள அமைச்சர்கள், அதி காரிகளுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்று தலைமைச் செயலாளருக்கு வருமான வரித்துறை சிபாரிசு செய்திருக்கிறதாம். இது, திருடனிடமிருந்து பிடுங்க வேண்டியதைப் பிடுங்கிக் கொண்டு, அதன் பிறகு விடுதலையாவதற்குத் தோதாக ஒரு கேசைப் போட்டு உள்ளே தள்ளும் போலீசின் நட வடிக்கையன்றி வேறென்ன?

அ.தி.மு.க. என்பது ஒரு பாளையக்காரர் கூட்டம். பாளையக்காரர்களின் உட்பகை யைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டைப் பிடித்த கும்பினிக்காரனின் இடத்தில் இருக் கிறது பாரதிய ஜனதா. தங்கள் பதவியையும் சொத்தையும் காப்பாற்றிக் கொள்வதற் காக, நாட்டின் பகுதிகளைக் கூறு போட்டு வெள்ளையனுக்கு எழுதிக் கொடுத்த மன்னர் களைப் போல, "காவிரி, நீட் தேர்வு, உதய் திட்டம், ஜி.எஸ்.டி." உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டு வருகிறார்கள் அ.தி.மு.க. அமைச் சர்கள். "வாரிசு இல்லாத மன்னர்களின் சமஸ்தானங்களை கும்பினி கைப்பற்றிக் கொள் ளலாம்" என அன்றைய கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி ஒரு சட்டம் இயற்றினான். அப் படி ஒரு சட்டத்தை இயற்றித் தமிழகத்தை முழுவதுமாகக் கைப்பற்றிக் கொள்ள முடியு மானால், மோடி அரசு பெரிதும் மகிழ்ந்திருக்கும். அவ்வாறு அவர்கள் கைப்பற்றிக் கொள் ளத் தடையாக அ.தி.மு.க.வில் யாரும் இல்லை. தமிழகத்தில் பா.ஜ.க.வைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருப்பது, தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வுதான்.

அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதா ஒரு பார்ப்பன பாசிஸ்டு. பாரதிய ஜனதாவோ பார்ப்பன பாசிசக் கட்சி. அந்தக் கழிசடை அரசியல் நாயகியை தாங்கிப் பிடித்து, ஊழல் வழக்குகளிலிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்ததில் முக்கியமான பங்கு பாரதிய ஜனதா வுக்குரியது. அ.தி.மு.க. என்பது ஒரு உதிரியான கிரிமினல்களைச் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு மாபியா கும்பல். பாரதிய ஜனதாவோ முறைப்படி ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கிரி மினல் கும்பல். அ.தி.மு.க.வுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையிலான வேறுபாடு திருடனுக் கும் போலீசுக்கும் இடையிலான வேறுபாட்டைப் போன்றதுதான். அ.தி.மு.க. என்ற திரு டர் கூட்டத்தை இணைத்துக் கட்டியிருந்த பார்ப்பன பாசிஸ்டு மறைந்த பிறகு, அந்தப் பாத்திரத்தை பார்ப்பன பாசிசக் கட்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. போலீசின் ஆசியுடன் தான் திருடர்கள் ஆட்சி நீடித்துக் கொண்டிருக்கிறது. திருடர்களை மக்கள் அறிவார்கள். இது திருட்டு போலீசு என்பதை அறியச் செய்யவேண்டும்.

●




# மார்க்ஸுக்கு முன்...
# மார்க்ஸுக்குப் பின்...

**சமூகத்தை மாற்ற விரும்புகிறவர்கள் அனைவரும் வரலாற்றை இப்படித்தான் பிரித்துப் பொருள் கொள்ள முடியும்.**

கார்ல் மார்க்ஸின் இருநூறாவது பிறந்த நாளை (மே 5, 2017) சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுகளும் கொண்டாடி வருகின்றனர். மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்று சோவியத், கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிசங்களின் வீழ்ச்சியைக் காட்டி முதலாளித்துவ அறிவுத்துறையினர் இடையறாது கூவினர். அந்தக் கூச்சல் அவநம்பிக்கையைப் பரப்புவதற்குப் பயன்பட்டதே தவிர, முதலாளித்துவத்தின் மீது நம்பிக்கையைத் தோற்றுவித்துவிடவில்லை. உலக முதலாளித்துவத்தின் மீளமுடியாத நெருக்கடியைப் புரிந்து கொள்ள முனையும் முதலாளித்துவப் பொருளாதார வல்லுநராக இருக்கட்டும், பொருளாதாரம் பற்றி ஏதுமறியாத இந்திய விவசாயியாக இருக்கட்டும், அனைவரையும் அது மார்க்ஸை நோக்கியே தள்ளுகிறது.

முப்பதாண்டுகளுக்கு முன் ஒரு பவுன் தங்கத்தின் விலையையும் ஒரு மூட்டை அரிசியின் விலையையும், ஒரு டன் கரும்பின் விலையையும் அரசு ஊழியரின் ஒரு மாத சம்பளத்தையும் ஒப்பிட்டு தங்களுடைய விளைபொருளின் மதிப்பு மட்டும் வீழ்ச்சி அடைந்ததன் நியாயம் என்ன என்று கேள்வி எழுப்புகிறார்கள் விவசாயிகள். ஒரு பொருளின் பயன் மதிப்புக்கும் பரிவர்த்தனை மதிப்புக்கும் இடையிலான இடைவெளி முதலாளித்துவப் பொருளாதாரத்தின்கீழ் அதிகரிப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிந்து கொள்ள விழைவோர் தவிர்க்கவியலாமல் மார்க்ஸிடம்தான் செல்ல வேண்டியிருக்கிறது.

உலகமயமாக்கம் முதலாளித்துவத்தின் தவிர்க்கவியலாத விதி என்ற உண்மையை புரிந்துகொள்ள விரும்புவோர் கம்யூனிஸ்டு அறிக்கையைத்தான் படிக்க வேண்டியிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில், கணினி, அலாக்ரிதம், செயற்கை அறிவு ஆகியவற்றைத் தம் கையில் வைத்திருக்கும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தால் வெளியேற்றப்படும் ஐ.டி. ஊழியர்கள், முதலாளித்துவம் உருவாக்கும் வேலையற்றவர்களின் ரிசர்வ் பட்டாளம் என்ற கருத்தாக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், மார்க்ஸிடம்தான் வர வேண்டியிருக்கிறது.

வரலாறு படைக்க விரும்புகிறவர்கள், மார்க்ஸுக்கு முன் - மார்க்ஸுக்குப் பின் என்று வரலாற்றைப் புரிந்து கொள்ளவேண்டும் எனக் கூறும் இந்த உரைவீச்சை, மார்க்ஸின் இருநூறாவது பிறந்த தினத்தையொட்டி வெளியிடுகிறோம்.

• ❍ •

மார்க்ஸுக்கு முன்...
மாரக்ஸுக்குப் பின்...

பொருளின்றி உச்சரிக்கப்படும்
சில சொற்கள் உண்டு.
எனினும் அவை பொருளற்ற சொற்களல்ல.

“இருபதாம் நூற்றாண்டிலுமா இப்படி?”
என்ற வியப்புக்குறி
இத்தகைய ரகம்.

கேட்பவர்கள் பாதிரியார்களாகவும்
கேட்கப்படுவது
பரிசுத்த ஆவியாகவுமிருந்தால்
கேள்வி நியாயம்தான்.

2000 ஆண்டுகள் முடிந்து விட்டன,
அதற்கென்ன?

5000 ஆண்டுகளாகவே இருக்கட்டும்.
அதற்கென்ன?

மனித குலத்தின்
வரலாற்று நெடுஞ்சாலையில்
தப்பிப் பிழைத்த ஒரு மைல்கல்
கிறிஸ்து சகாப்தம்.

திருச்சபையின் ஆட்சியை
முடித்து வைத்த மூலதனம்
ஆண்டவருக்கு வழங்கிய மானியம்
“கிறிஸ்து சகாப்தம்.”

❍

பூச்சியங்கள் கூடக்கூட
மனிதகுலத்தின் முன்னேற்றம் கூடுமெனில்
வயது கூடினால் மனிதனின்
அறிவும் கூட வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டிலா இப்படி
என்ற வியப்புக்கு விடை

இருபதாம் நூற்றாண்டில்தான் இப்படி!

தங்கம், வெள்ளி, வைரம், இரும்பு, செம்பு, துத்தநாகம்,
யுரேனியம், கோபால்ட் போன்ற
அனைத்து உலோகங்களையும்
நெல், வாழை, கரும்பு, சோளம், காப்பி
என்றனைத்துப் பயிர்களையும் விளைவிக்கும் - சயர்*
பிச்சைக்கார நாடு!

இவையெதுவுமில்லாத ஜப்பான் பணக்கார நாடு.
இருபதாம் நூற்றாண்டில்தான் இது சாத்தியம்.

வானம் பொய்த்தபோது மனிதர்கள்
பஞ்சத்தால் செத்திருக்கிறார்கள்.

கறந்த பாலைச் சாக்கடையிலும்
விளைந்த கோதுமையைக் கடலிலும் கொட்டிவிட்டு
ஆண்டுக்கு 150 லட்சம் மனிதர்களைப்
பட்டினி போட்டுச் சாகடிப்பது இருபதாம் நூற்றாண்டில்தான்.

கொள்ளை நோய்களுக்கு மருந்து தெரியாமல்
மக்கள் மடிந்த நூற்றாண்டுகளுண்டு.
மருந்து வியாபாரிகளின் கொள்ளையால்
மக்கள் மடிவது இருபதாம் நூற்றாண்டு.

முன்னேற்றம் காலத்தால் அளவிடப்படுவதில்லை.

சிந்துவெளியின் நகர நாகரிகத்தை அழித்தனர் -
ஆரியக் காட்டுமிராண்டிகள்.
காலத்தால் பிந்தையதென்பதால்
ஆரியம் - முன்னேற்றமல்ல.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளுக்குப்
பிந்தையதுதான் மனுநீதி.
பிரஞ்சுப் புரட்சிக்குப் பின்னர்தான் லூயி போனபார்ட்.
அக்டோபர் புரட்சிக்குப் பிந்தையதுதான்
எல்ட்சினின் ஆட்சிக் கவிழ்ப்பு.

முன்னேற்றம் ஆண்டுகளால் அளவிடப்படுவதில்லை.
காலம்தான் முன்னேற்றத்தால் அடையாளம் இடப்படுகிறது.

இயற்கையுடன் மனிதன் கொண்ட உறவினால்
காலத்தை அடையாளமிடுவதாயின்

பாட்டாளி வர்க்க ஆசான் காரல் மார்க்ஸின் இருநூறாவது பிறந்த தினத்தையொட்டி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, சென்னை - நொளம்பூர் பகுதியில் படத் திறப்போடு நடத்திய பிரச்சாரம்.






சோசலிசம் வீழ்த்தப்பட்ட ரசியாவில்
மீண்டும் ''கம்யூனிச பூதம்!''

அன்று கற்காலம்.
இன்று கணினிக் காலம்.

மனிதனுடன் மனிதன் கொண்ட உறவினால்
அடையாளமிடுவதாயின்
இது முதலாளித்துவத்தின் காலம்;
ஏகபோக மூலதனத்தின் காலம்.

இருபதாம் நூற்றாண்டிலுமா இப்படி
என்று கேள்விக்குறியிடுவோர்
முதலாளித்துவச் சமூகத்திலுமா இப்படி
என்று சொல்லிப் பாருங்கள்
- கேள்வியின் முரண் கேட்பவரின் நாக்கையே அறுக்கும்.

அநீதியின் திரண்ட வடிவம் மூலதனம்
பாட்டாளி வர்க்கம் உழைக்க உழைக்க,
பாற்கடலைக் கடையக் கடைய,
மூலதனம் எனும் ஆலகால விஷம்தான் திரண்டு வருகிறது.

கடலின் அடியாழத்தில் கிடந்த அனைத்துக் கசடுகளும்
புதிய வீரியத்துடன் மிதந்து எழும்புகின்றன.

ஆப்பிரிக்கப் பழங்குடிகள்
இந்தியச் சாதிகள்
ஆப்கான் இனக்குழுக்கள்
எகிப்திய மம்மிகள்...
இறந்தகாலத்தின் ஆவிகளனைத்தும்
மூலதனத்தின் குரலில் அலறுகின்றன.

செவ்வாய் நோக்கிப் பாய்கிறது விஞ்ஞானம்.
தத்துவ ஞானமோ, நீட்சேயின் மீமனிதன்
கான்ட்டின் அறியொணாவாதம்
சங்கரனின் மாயாவாதம் - எனத்
திரும்புகிறது.

டோலி*யைப் படைக்கிறது விஞ்ஞானம்;
மேய்ப்பவனை நாடுகிறது மெய்ஞ்ஞானம்.
எல்லா உற்பத்திச் சக்திகளும் முன்நோக்கிப் பாய்கின்றன;
உற்பத்திச் சக்திகளில் தலையாய மனிதன்
பின்னிக்கிழுக்கப்படுகிறான்.





உழைப்பவனுக்குத் தெருக்கோடி; ஊரைக் கொள்ளையடிக்கும் அம்பானிக்குப் பல நூறு கோடியில் நவீன அரண்மனை: முதலாளித்துவம் உருவாக்கியிருக்கும் சகிக்க முடியாத ஏற்றத்தாழ்வு.

---

2000 ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து பிறந்தார்.
25 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் அவதரித்தான் -
குரங்கிலிருந்து.

கற்காலத்தின் முதல் கல்லை
மனிதன் தீட்டத் துவங்கியதோ
ஒரு லட்சம் ஆண்டுகள் முன்.
கல்லையும் மரத்தையும் செதுக்கியபோதெல்லாம்
தானும் செதுக்கப்பட்டதை அறியாமல்,
மண்ணை உழுதபோதெல்லாம்
தானும் பண்படுத்தப்பட்டதை உணராமல்,
நூற்றாண்டுகள் பல போயின.

மார்க்ஸ் வந்தார்:
''இயற்கையை மாற்றியமைத்த போதே நீயும்
மாற்றியமைக்கப்பட்டாய்.
''இயற்கையுடனான உனது உறவு மாறியபோது
சக மனிதனுடனான உனது உறவும் மாறியதே.
உன் உடலின் மீதே உரிமையின்றி
அந்நியப்படுத்தப்பட்டபோது
நீ அடிமை;
நிலத்திலிருந்து அந்நியப்பட்டபோது பண்ணையடிமை.
இப்போது உன் உழைப்பிலிருந்தே
அந்நியப்படுத்தப்பட்டிருக்கிறாய், நீ பாட்டாளி''

''உழைப்பு - இயற்கையினால் சுமத்தப்பட்ட அவசியம்.''

''உழைப்பைச் சாபக் கேடாகவும்
ஓய்வைச் சுதந்திரமாகவும் உணர்தல்
மனிதத் தன்மையல்ல.''

''எது மிருகத் தன்மையோ
அது மனிதனுக்குரியதாகியிருக்கிறது.''

''பாட்டாளி வர்க்கமே, நீதான் இம்மனித குலத்தின் மீட்பன்''

''உன் பணி உலகை வியாக்கியானம் செய்வதன்று -
அதனை மாற்றியமைப்பது''

- என்று தத்துவ ஞானத்தைத்
தரையிறக்கினார் மார்க்ஸ்.

சொல்லுங்கள்! மனித குலத்தின் வரலாற்றை
யாருக்குப் பின் - என்று கணக்கிடுவது பொருத்தம்?

மார்க்சுக்குப் பின் என்று கணக்கிட்டவர்கள்
சோசலிசம் படைத்தார்கள்.

கிறிஸ்துவுக்கு மறுவருகையில்லை;
கிருதயுகம் எழுவதுமில்லை.

விலங்குத் தன்மையை இழந்தவன் மனிதன் -
எனக் குறிக்க வேண்டுமானால்
குரங்குக்குப் பின் என்று கணக்கிடலாம்.

மனிதத் தன்மையை உணர்ந்தவன் மனிதன் -
எனக் குறிக்க வேண்டுமானால்
மார்க்சுக்குப் பின் என்று கணக்கிடலாம்.

'21-ஆம் நூற்றாண்டிலா!' என்ற
வியப்புக்குறியைக் கேள்விக்குறியாக்குங்கள்.

நாகரீகத்திற்குப் பின் அநாகரிகமா?
குறளுக்குப் பின் மனுநீதியா?
சோசலிசத்திற்குப் பின் முதலாளித்துவமா?
- என்று கேட்டுப் பழகுங்கள்.

மனிதர்களின் வரலாற்றை
மார்க்சுக்கு முன்
மார்க்சுக்குப் பின் - என்று
திருத்தி எழுதுவோம்.

- மருதையன்,
புதிய கலாச்சாரம், ஜனவரி, 2000.

*குறிப்பு:*
**சயர்:** மத்திய ஆப்பிரிக்காவின் மிகவும் பின்தங்கிய ஏழை நாடு.
**டோலி:** பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் உரு வாக்கிய ஆடு.

# நீட் தேர்வு:
# ஏழைகளுக்கு எதிரான புதிய மனுநீதி!

**உச்சநீதி மன்றத்தின் கட்டப் பஞ்சாயத்து மூலம் திணிக்கப்பட்டுள்ள நீட் தேர்வு, மருத்துவக் கல்வியைப் பணக்கார வீட்டு வாரிசுகளின் தனிச் சொத்தாக்கிவிட்டது.**

நாயைக் கொல்வதென்றாலும் சட்டப்படிதான் கொல்வாம் என ஆங்கிலேய காலனி ஆட்சியாளர்கள் தமது நேர்மைக்குத் தாமே சர்டிபிகேட் கொடுத்துக் கொண்டது போல, நீட் தேர்வை நியாயப்படுத்த தரம், தகுதி, தனியார் கட்டணக் கொள்ளையைத் தடுப்பது என வாதங்கள் அடுக்கப்படுகின்றன. நீட் தேர்வுக்கு வக்காலத்து வாங்கும் மோடி அரசு, இந்திய மருத்துவ கவுன்சில், உச்ச மற்றும் உயர்நீதி மன்றங்கள் ஆகியவை எல்லாம் தாம் ஏதோ வானத்திலிருந்து குதித்த அப்பழுக்கற்றவர்கள் போலவும், நீட் தேர்வை எதிர்ப்பவர்கள் தரம், தகுதிக்கு எதிரான ஊழல் பேர்வழிகள் போன்றும் ஒரு சித்திரத்தைக் கட்டமைக்கின்றன.

இந்தியாவிலேயே, அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய முறைகேடு வியாபம் ஊழல்தான். மத்திய பிரதேச மாநிலத்தில் நடந்த இந்த ஊழலின் சூத்திரதாரிகள் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். யோக்கிய சிகாமணிகள். அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான், அவரது மனைவி என இந்த ஊழலில் கைநனைத்த பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்களின் பட்டியில் நீளமானது. இந்த ஊழலை அம்பலப்படுத்தியவர்கள், முக்கிய சாட்சிகள் எனப் பலர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு, இந்த ஊழலின் தடயங்களை மறைக்க நடந்த முயற்சிகள் தனியொரு கிரிமினல் வரலாறாக நீள்கிறது.

இந்திய மருத்துவ கவுன்சிலின் யோக்கியதை என்ன? தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிகளில் உள்ள முதுகலை மருத்துவப் பட்டப் படிப்புகளில் 50 சதவீத இடங்களை மாநில அரசிடம் ஒப்படைத்து, அரசு நடத்தும் கவுன்சிலிங் மூலம் மட்டும்தான் அந்த இடங்களுக்கு மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்கிறது, இந்திய மருத்துவ கவுன்சிலின் விதி. இந்த விதியை கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தமிழக அரசும் பின்பற்றவில்லை. இந்திய மருத்துவ கவுன்சிலும் இந்த முறைகேட்டைக் கண்டு கொள்ளவில்லை. இந்த முறைகேட்டுக்காக சென்னை உயர்நீதி மன்றம் இந்திய மருத்துவ கவுன்சிலுக்கு ஒரு கோடி ரூபாய் அபராதம் விதித்திருக்கிறது.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் நடைபெறும் ஊழல்கள், முறைகேடுகள் குறித்து ஆராய்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவும், இந்த இழிநிலைக்கு இந்திய மருத்துவக் கவுன்சில்தான் காரணம் என்றே குற்றம் சாட்டியிருக்கிறது. போலி மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் கொடுத்து பல நூறு கோடி லஞ்சம் வாங்கிய இந்திய மருத்துவக் கவுன்சிலின் தலைவர் கேதன் தேசாய், 2010-இல் சி.பி.ஐ.யால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார். டாக்டர் தொழில் செய்வதற்கான உரிமம் பறிக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டு

ம.பி. பா.ஜ.க. முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் (இடது) ஆட்சியில்தான் வியாபம் ஊழல் அதன் உச்சத்தைத் தொட்டது. தரமற்ற, மோசடியான தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கி, கோடிக்கணக்கில் ஊழல் பணத்தோடு சி.பி.ஐ.யால் பிடிக்கப்பட்ட இந்திய மருத்துவ கவுன்சிலின் முன்னாள் தலைவர் கேதான் தேசாய். (கோப்புப் படம்)







வியாபம் ஊழல் விசாரணை நடந்துகொண்டிருந்தபோதே, மர்மமான முறையில் இறந்துபோன ஜபல்பூர்-நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் மருத்துவக் கல்லூரி முதல்வர் அருண் ஷர்மா (இடது), வியாபம் ஊழல் குறித்து விசாரணை நடத்திவந்த ஆஜ் தக் தொலைக்காட்சி நிருபர் அக்சய் சிங் (நடுவில்) மற்றும் மருத்துவ மாணவி நர்மதா. (கோப்புப் படங்கள்)

களுக்குள் தேசாயை மீண்டும் இந்திய மருத்துவ கவுன் சிலுக்கு நியமித்தது குஜராத் பல்கலைக்கழகம்.

ஒரு வழக்கை விசாரித்து முடிப்பதற்கு முன்பே தீர்ப்புக் கூறுவது ஊழலுக்கு நிகரான முறைகேடு. நீட் தேர்வு வழக்கில் இம்முறைகேட்டினைத் துணிந்து செய்திருக்கிறது, உச்சநீதி மன்றம். நீட் தேர்வு தேவையா என்பது குறித்து நடந்த வழக்கை விசா ரித்த அல்தாமஸ் கபீர் தலைமையில் அமைக்கப்பட்ட அமர்வு, இத்தேர்வு தேவையில்லை எனப் பெரும் பான்மையின் அடிப்பையில் தீர்ப்புக் கொடுத்தது. இத் தீர்ப்பை எதிர்த்து மைய அரசு வழக்கு போட்டது. உச்ச நீதிமன்றம் அதனை இன்னும் விசாரிக்கவே இல்லை. இருப்பினும் அதற்குள் நீட் தேர்வை அமல்படுத்து வது என்ற முந்தைய உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான முடிவு அமல்படுத்தப்படுகிறது. நீட் தேர்வு சரியா, தவறா என்பது இனிமேல்தான் விசாரிக்கப்படும்.

புரியும்படி சொல்வதென்றால் இப்படியும் கூற லாம். தற்போது சசிகலா போட்டுள்ள சீராய்வு மனு விவகாரத்தில் சசிகலாவை விடுதலை செய்து விட்டு, அதன் பிறகு, அவரை விடுவித்தது சரியா, தவறா என்று பொறுமையாக விசாரித்துத் தீர்ப்பு கூறினால், அது எத்த கைய கேலிக்கூத்தாக இருக்குமோ அதைவிடப் பெரிய கேலிக்கூத்து இது.

தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்தாக வேண்டும் என்ற தார்மீக ஆவேசம் காரண மாகத்தான் உச்ச நீதிமன்றம் அவ்வளவு அவசரப்பட் டது என்பதை அறிவோம். கடந்த ஆண்டு நீட் தேர்வு முடிந்தபின், தனியார் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக் கீட்டு மாணவர் சேர்க்கையில் தலையிட மைய அரசு மறுத்துவிட்டது. இதனால் வழக்கம் போல கொள்ளை நடந்தது. இதன் மீது உச்ச நீதிமன்றம் எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை. மாறாக, அடுத்த ஆண்டு முதல் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாக ஒதுக்கீடு மாணவர் சேர்க்கையை மாநில அரசுகள்தான் நடத்த வேண்டும் என உத்தரவு போட்டு நழுவிக் கொண்டது. இன்னொருபுறம், தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஒவ் வொன்றும் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான கட்ட ணத்தைப் பலமடங்கு உயர்த்த அனுமதிக்குமாறு அரசி டம் மனு போட்டுவிட்டன.

சி.பி.எஸ்.இ. பள்ளி கள் நீட் தேர்வுக்கான தனிப்பயிற்சி வகுப்பு களை நடத்தக் கூடாதென விதி இருப்பதாகக் கூறப்ப டுகிறது. சி.பி.எஸ்.இ. நிர் வாகம் அதனைக் கண்டு கொள்ளவில்லை. நீட் தேர்வு பயிற்சிக்கு 40,000, 50,000 எனக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மொத்தத்தில், நீட் தேர்வு கல்விக் கொள்ளையை ஒழிக்கவில்லை, மாறாக, அதனைச் சட்டபூர்வமாக் கியிருப்பதோடு, கொள்ளைக்குப் புதிய வழிகளையும் திறந்துவிட்டிருக்கிறது.

தமிழகத்தில் நீட் தேர்வு பத்தாம்பசலித்தனமாகவும் முட்டாள்தனமாகவும் எதிர்க்கப்படுவது போலக் கற்பி தம் செய்துகொண்டு, தமிழக மாணவர்களின் திறமை யைக் குறைத்து மதிப்பிடக்கூடாது, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பாடங்களை முறையாக நடத்தினால் தமிழக மாணவர்கள் நீட் தேர்வை ஊதித் தள்ளிவிடுவார்கள், தமிழகப் பாடத்திட்டத்தை சி.பி.எஸ்.இ.-க்கு இணை யாகத் தரம் உயர்த்த வேண்டும் என்றெல்லாம் நீட் தேர் விற்கு ஆதரவாகப் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப் படுகின்றன.

நீட் தேர்வை எதிர்ப்பதற்குத் தமிழக மாணவர்க ளின் திறமையோ, தமிழகப் பாடத் திட்டத்தின் தரமோ முதன்மையான காரணமல்ல. நீட் தேர்வு, தமிழகத்தி லுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு, குறிப்பாக அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்க் கும் உரிமையைத் தமிழக அரசிடமிருந்து தட்டிப் பறிக் கிறது என்பதுதான் மையமானது. இந்த அநீதியை மிக வும் நைச்சியமான வழியில் மைய அரசும், நீதிமன்றங் களும் செய்கின்றன.

மாநிலப் பாடத்திட்டம் தரமற்றது, மாநில அரசு நடத்தும் தேர்வுகள் தரமற்றவை; மைய பாடத்திட்டம், தேசியத் தேர்வுகள் என்றால் தரமானது; மாநில அரசு நிர்வாகம் ஊழல்மயமானது, சி.பி.ஐ. போன்ற மைய அரசின் அமைப்புகள் அப்பழுக்கற்றவை; மாநிலக் கட் சிகள், குறிப்பாக திராவிடக் கட்சிகள் ஊழலும், முறை கேடுகளும் நிரம்பியவை, தேசியக் கட்சிகள் நேர்மை யானவை என்றவாறு ஒரு பொய்யை தமிழகப் பார்ப்ப னக் கும்பல் தொடர்ந்து கட்டமைத்து வருகிறது. அதன் நீட்சிதான் நீட் தேர்வுத் திணிப்பு.

நீட் தேர்வு இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைப் பறித்துவிடவில்லை என்பது உண்மைதான். ஆனால், அந்த இட ஒதுக்கீடை இனி யார் அனுபவிப்பார்கள் என்பதுதான் முக்கியமான கேள்வி. நீட் தேர்விற்கு முன்னதாகவே, அரசுப் பள்ளிகளில் படித்த கிராமப்புற ஏழை மாணவர்கள் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் சேரும் வாய்ப்பு பறிபோய்விட்டது. கடந்த பத்தாண் டுகளில் வெறும் இருநூற்று சொச்சம் அரசுப் பள்ளி

# நீட் : வியாபம் – தேசியமயம்!

நீட் தேர்வு எவ்வித முறைகேடும் இன்றி அப்பழுக்கற்ற விதத்தில் நடத்தப்படும் என உருவாக்கப்பட்ட மாயை இந்த ஆண்டே உடைந்து போய்விட்டது. இத்தேர்வுக்கான வினாத்தாட்கள் அனைத்து மொழிகளிலும் ஒரே மாதிரியாக இல்லாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமாக இருந்தது எனவும், ஆங்கிலம், வங்காள மொழி வினாத்தாட்களைவிட, குஜராத்தி மொழி வினாத்தாட்கள்தான் மிகவும் எளிமையாக இருந்தது எனவும், இதன் காரணமாக இந்த ஆண்டு குஜராத்தைச் சேர்ந்த மாணவர்கள்தான் அதிக மருத்துவ இடங்களைப் பெறுவார்கள் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தில் இன்னும் என்னென்ன முறைகேடுகள் நடந்திருக்கும் அல்லது நடக்கக்கூடும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், வியாபம் ஊழலின் வரலாறைப் படிக்கவும். நீட் என்பது வியாபம் – தேசியமயம்!

மாணவர்கள்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்திருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த அவலத்தை நீட் தேர்வின் மூலம் நடைபெறும் மாணவர் சேர்க்கை மேலும் தீவிரப்படுத்தும். குறிப்பாக, சி.பி.எஸ்.இ. பள்ளிகளிலும், 40,000, 50,000 கொடுத்து தனியார் பயிற்சிப் பள்ளிகளிலும் சேர வாய்ப்புள்ள நல்ல வசதி படைத்த பார்ப்பன, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இனி தமிழகத்தில் மருத்துவராக முடியும்.

மேலும், வட இந்திய மாணவர்களின் எண்ணிக்கையும் தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் அதிகரிக்கக் கூடும். தமிழகத்திலுள்ள ரயில்வே அலுவலகங்களிலும், மைய அரசின் அலுவலகங்களிலும் வட இந்திய ஊழியர்களின் எண்ணிக்கை பெருத்துள்ளதைப் போன்ற நிலையைக் கூடிய விரைவிலேயே அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் தமிழக மக்கள் காணக் கூடும்.

நீட் தேர்வும், முதுகலை மருத்துவப் படிப்புகளில் தமிழக அரசு மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பதும் தமிழக அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களின், சிறப்பு மருத்துவர்களின் பற்றாக்குறைக்கு இட்டுச் சென்று, ஏழை நோயாளிகளின் உயிர் வாழும் உரிமையைப் பறிக்கும் நிலையை உருவாக்கும். தரமான, தகுதியான மருத்துவர்கள் என்பது இறுதியில் ஏழை மாணவர்களுக்கும் ஏழை நோயாளிகளுக்கும் எதிரானதாக அமைகிறது.

நீட் தேர்வானது, மருத்துவக் கல்வி பயிலும் வாய்ப்பைப் பணக்கார வீட்டு வாரிசுகளின் தனியுரிமையாக்குகிறது. பணக்கார மாணவர்களுக்கு நூறு சதவீத இட ஒதுக்கீடு என்ற புதிய சமூக நீதியை மருத்துவக் கல்வியில் புகுத்துகிறது. மருத்துவக் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுப்பதாக கூறிக்கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு அதற்கு நேர் எதிரான விளைவையே அளித்திருக்கிறது. இந்த பணக்கார வாரிசுகளும், பார்ப்பன – ஆதிக்க சாதி மேட்டுக்குடியினரும் மருத்துவர்களாகி அரசு மருத்துவமனைகளில் சேர்ந்து ஏழைகளுக்குச் சேவை செய்யப்போவதில்லை. அமெரிக்காவுக்குப் பறப்பது எப்படி என்பதுதான் அவர்களது கவலையாக இருக்கும்.

மருத்துவக் கல்வியின் தரத்தையும் மருத்துவ சேவையின் தரத்தையும் மருத்துவர் தொழிலின் மாண்பையும் காப்பாற்றுவதற்குத்தான் அரும்பாடுபடுவதாக மோடி அரசும் உச்ச நீதிமன்றமும் கூறிக் கொள்கின்றன. அந்தக் கனவு நிறைவேறுமா?

2016 17ஆம் ஆண்டுக்கான உலக மருத்துவக் கழகத் தலைவராக கேதன் தேசாய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் மீது சி.பி.ஐ. போட்டிருக்கும் கிரிமினல் வழக்கு ரத்து செய்யப்பட்டு விட்டதாகப் பொய் சொல்லி, தேசாயை இந்தப் பதவிக்கு முன் மொழிந்திருக்கிறது இந்திய மருத்துவ கவுன்சில். இந்த அசிங்கமான உண்மையை ராய்ட்டர் நிறுவனம் அம்பலப்படுத்தியிருக்கிறது. ராய்ட்டர் புலனாய்வு தேவைப்படாத வேறொரு உண்மையும் இருக்கிறது. 2013-இல் கேதன் தேசாய்க்கு குஜராத்தில் மறுவாழ்வு தரப்பட்டபோது, அங்கே முதல்வராக இருந்தவர் திருவாளர் மோடி. தேசாய்க்கு சர்வதேச கவுரவம் வழங்கப்பட்டிருக்கும் இந்த தருணத்தில், பிரதமராக இருப்பவரும் திருவாளர் மோடிதான்.

தகுதி வாழ்க, திறமை வாழ்க, நல்லொழுக்கம் வாழ்க, நீட் வாழ்க! பாரத் மாதா கி ஜெய்!

● அழகு

தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இட ஒதுக்கீடை இந்திய மருத்துவ கவுன்சிலின் விதிகளைக் காட்டி சென்னை உயர்நீதி மன்றம் ரத்து செய்ததைக் கண்டித்து அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



# மானத்தை இழந்து மருத்துவராவதா?

**நீட் தேர்வின்போது தமிழக மாணவர்கள் மீது ஏவிவிடப்பட்ட சோதனைகளில் மேட்டுக்குடி வர்க்கத் திமிரும், ஆதிக்கசாதி வெறியும், தமிழர்களுக்கு எதிரான காழ்ப்பும் வெளிப்பட்டன.**

மருத்துவம் பயில விரும்பும் மாணவர்களின் தரத்தைச் சோதிக்க நடத்தப்படுவதாகக் கூறப்படும் நீட் தேர்வு தமிழக மாணவர்களுக்குக் கொடுங்கனவாய் முடிந்திருக்கிறது. மாணவ-மாணவிகளை அம்மண மாக்கிச் சோதிக்கவில்லை என்பதைத் தவிர, அவர்களின் உடல் மீதும் உணர்வுகள் மீதும் கொடூரமான அத்துமீறல்களை நடத்தியிருக்கிறது, சி.பி.எஸ்.இ. இத்தேர்வே தமிழக மாணவர்களின் மீது ஏவப்படும் உளவியல் வன்முறை என்பதை இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

தேர்வுக் கண்காணிப்பாளர்களும் செக்யூரிட்டிகளும் மாணவ-மாணவிகளைப் பரிசோதித்த விதம், ஒருபுறம் அதிகார வர்க்க அபத்தத்தின் உச்சம் என்றால், இன்னொருபுறம் அச்சோதனைகள் தமிழக மாணவர்கள் மீது வட இந்திய சி.பி.எஸ்.இ. அதிகாரிகள் கொண்டிருந்த வன்மத்தை எடுத்துக்காட்டியது. தேர்வுக்கு முதல்நாள் தினசரிகளில் வெளிவந்த செய்திகளில், 10.00 மணிக்குத் தொடங்கவிருக்கும் தேர்வுக்கு, மாணவர்கள் 7.30 மணிக்கே தேர்வு மையத்திற்கு வரலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் மீது இப்படியொரு அக்கறையா என நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் மறுநாள் தான் தெரிந்தது, அது அக்கறையல்ல, தமிழக மாணவர்களை அலைக்கழிப்பதற்கும் அசிங்கப்படுத்துவதற்குமான சதி என்பது.

முழுக்கை சட்டை, டார்க் கலர் ஆடைகளை அணிந்து வந்த மாணவ - மாணவிகள் வேறு ஆடைகளை அணிந்து வருமாறு துரத்தப்பட்டார்கள். இதனால் வெளியூர்களிலிருந்து தேர்வு எழுத வந்த மாணவர்களும், பெற்றோர்களும் அந்தக் காலை நேரத்தில் துணிக்கடைகளைத் தேடி அலைய நேர்ந்தது. அதற்கு வாய்ப்பில்லாத மாணவர்களின் சட்டைகளும், மாணவிகளின் டாப்ஸும் தாறுமாறாகக் கிழித்து எறியப்பட்டன.

மாணவிகள் அணிந்துவந்த துப்பட்டா, தோடு, மூக்குத்தி ஆகியவை கழற்றப்பட்டன. இறுகத் தலை பின்னி வந்திருந்த மாணவிகள், முடியை அவிழ்த்துப் போடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதன் பிறகு அவர்களின் தலைமுடிக்குள் கையை நுழைத்து அங்குலம் அங்குலமாகத் துழாவினார்கள், தேர்வுக் கண்காணிப்பாளர்கள்.

சட்டையிலோ, கால் சட்டையிலோ பெரிய, இரும்பாலான பட்டன்கள் இருந்தால், அவை அறுத்து எறியப்பட்டன. மாணவ, மாணவிகளின் கண், காது, மூக்கிற்குள் டார்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சி பரிசோதித்திருக்கிறார்கள். உடல் பலவீனமான மாணவி ஒருவர், தேர்வு அறைக்குள் சாக்லெட் எடுத்துச் செல்ல அனுமதி கோரியபொழுது, அந்த சாக்லெட்டை உடைத்துப் பொடியாக்கி, அதையும் டார்ச் ஒளியில் பரிசோதித்திருக்கிறார்கள்.

நவீனமான தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி, மாணவ-மாணவிகள் காப்பியடித்து விடக்கூடாது என்பதற்காகவே இப்படி பரிசோதித்ததாக நியாயப்படுத்தியிருக்கிறது, சி.பி.எஸ்.இ. தேர்வு மையங்களைச் சுற்றி ஜாமர் கருவிகளைப் பொருத்திவிட்டு, மாணவ-மாணவிகளை இப்படியெல்லாம் பரிசோதிப்பதற்கு அவசியமே கிடையாது.

நீட் தேர்வில் கேட்கப்படும் வினாக்களுக்கு விரிவாக விடைகளை எழுத வேண்டியதில்லை. விடையை கம்ப்யூட்டர் கோடிங் ஷீட்டில் குறிக்க வேண்டும். “இம்மாதிரியான தேர்வு முறையில்





ஒரு மாணவனின் உடல் அசைவை வைத்தே, அவன் காப்பியடிக்கிறனா, இல்லையா என்பதைத் தேர்வுக் கண்காணிப்பாளர் கண்டுபிடித்துவிட முடியும். இது முடியாதென்றால், தேர்வு நடத்துவதற்கு வந்த கண்காணிப்பாளர்களெல்லாம் அந்தப் பணிக்கே இலாயக்கில்லாதவர்கள்'' என ஒரு தொலைக்காட்சி விவாதத்தின்பொழுது சாடினார், கல்வியாளர் நெடுஞ்செழியன்.

கேரள மாநிலம், கண்ணூர் மாவட்டம், குன்கிமங்கலத்தில் உள்ள கொவ்வாபுரம் தனியார் பள்ளியில் தேர்வு எழுதவந்த மாணவியொருவரின் உள்ளாடையைக் கழட்டச் சொல்லி, அதன் பிறகு அவரைத் தேர்வு மையத்திற்குள் அனுமதித்துள்ளனர். அந்த மாணவி, பாத்ரூமிற்குச் சென்று கழட்டுவதாகக் கூறியதை ஏற்றுக் கொள்ளாத கண்காணிப்பாளர்கள் என்ற மிருகங்கள் தம் கண் முன்னே கழட்ட வைத்து, அந்த உள்ளாடையை அம்மாணவியின் தாயிடம் கொடுக்க வைத்துள்ளனர்.

இது விதிவிலக்கான சம்பவம் என்றும், அந்தத் தேர்வு மையக் கண்காணிப்பாளர்களின் ஆர்வக் கோளாறு என்றும் குறிப்பிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது, சி.பி.எஸ்.இ. ஆனால், இது விதிவிலக்கல்ல என்கிறார்கள், தமிழக மாணவர்கள்.

புடவை அணிவதும், துப்பட்டா போட்டுக்கொள்வதும் தமிழகக் கலாச்சாரம். புடவை கட்டி வரக் கூடாதென உத்தரவுபோட்ட சி.பி.எஸ்.இ., துப்பட்டா போட்டுக் கொள்வதையும் அனுமதிக்கவில்லை. துப்பட்டா இல்லாமல் இருந்ததே மாணவிகளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும் என்றார் ஒரு மாணவியின் தாய்.

மெட்டல் டிடெக்டரைக் கொண்டு பரிசோதித்த செக்யூரிட்டிகள், ஒவ்வொரு மாணவனையும் பேண்ட் ஜிப்பை அவிழ்த்துக் காட்டுமாறு கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இப்பரிசோதனை தனியறையில் நடைபெறவில்லை. எல்லோர் முன்னிலையில், அதுவும் மாணவிகளும் இருக்கிறார்கள் என்ற அறிவுகூட இல்லாமல், மாணவர்களை ஜிப்பை அவிழ்க்க வைத்திருக்கிறார்கள்.

''காலை 7.50 மணிக்கெல்லாம் தேர்வு மையத்திற்குச் சென்ற என்னை, திரும்பத் திரும்பப் பரிசோத்தித்து, 9.30 மணிக்கு மேல்தான் தேர்வு அறைக்குள் செல்ல அனுமதித்தார்கள். உன்னைப் பார்த்தாலே சந்தேகமாக இருக்கிறது எனத் திரும்ப திரும்பச் சொல்லியதோடு, என்னை முட்டிப் போட வைத்து, தலைமுடியை அவிழ்த்துப் போடச் சொல்லி, ஒரு ஆண் செக்யூரிட்டியைக் கொண்டு எனது தலைமுடிக்குள் கையை நுழைத்துத் திரும்பத் திரும்பத் தடவிக் கொண்டேயிருந்தார்கள்'' என்றார், தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்ட ஒரு மாணவி. இதுவெல்லாம் பாலியல் அத்துமீறல் அன்றி வேறென்ன?

**தென்னிந்தியர்கள் பற்றி தருண் விஜய் தேரிவித்த கருத்துக்கும், திராவிட இயக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று கூறும் பா.ஜ.க. வின் ஆரியப் பார்ப்பன வெறிக்கும், நடைபெற்றிருக்கின்ற இந்தச் சோதனைக்கும் இடையிலான உறவு புரிந்து கொள்ளக் கடினமானதல்ல.**

மாணவ - மாணவிகள் மணிக்கட்டில் கட்டியிருந்த கயிறுகளை சி.பி.எஸ்.இ. அதிகாரிகள் அங்கீகரிக்கவில்லை. ''அவற்றை அறுத்தெறிந்த சி.பி.எஸ்.இ. அதிகாரிகள், பூணூல் கயிறை மட்டும் அறுக்காதது ஏன்?'' என்ற கேள்வி எழுப்பினார் பா.ம.க. வழக்குரைஞர் பாலு.

வட மாநிலங்களில் இவை போன்ற கெடுபிடிகள் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய மற்றொரு கல்வியாளர், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளிலும் இது போன்று தமிழக மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதைச் சுட்டிக் காட்டினார். தமிழர்களை மதராஸிகள் எனக் கீழ்த்தரமாக நையாண்டி செய்வது இந்தி பேசும் வடமாநிலப் பொதுப் புத்தி. இந்த இந்தி தேசிய பொதுப்புத்திதான் தமிழக மாணவர்களை கிரிமினல்கள் போல நடத்தியிருக்கிறது.

தமிழகத்தில் நீட் தேர்வை எழுதிய 86,000 மாணவர்களுள் 70,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழகப் பாடத்திட்டத்தின் கீழ் பயின்றவர்கள். சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தின்படி நடத்தப்படும் நீட் தேர்வைத் தம்மால் எதிர்கொள்ள முடியுமா என்ற சந்தேகத்தோடுதான் அம்மாணவர்களுள் பெரும்பாலோர் இத்தேர்வை எதிர்கொண்டனர். அப்படிபட்ட மாணவர்களுக்குத் தமது கெடுபிடிகளின் மூலம் பெரும் மன உளைச்சலைக் கொடுத்து, அவர்கள் நிம்மதியாகத் தேர்வை எதிர்கொள்ள முடியாமல் செய்துவிட்டது, சி.பி.எஸ்.இ.

தென்னிந்தியர்கள் பற்றி தருண் விஜய் தெரிவித்த கருத்துக்கும், திராவிட இயக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று கூறும் பா.ஜ.க.-வின் ஆரியப் பார்ப்பன வெறிக்கும், நடைபெற்றிருக்கின்ற இந்தச் சோதனைக்கும் இடையிலான உறவு புரிந்து கொள்ளக் கடினமானதல்ல.

அடிமை இந்தியர்களுக்கு எதிராக பிரிட்டிஷார் கடைப்பிடித்த காலனியாதிக்க மனோபாவத்துடன் வெள்ளை நிறவெறியும் பிரிக்க முடியாமல் கலந்துதான் இருந்தது. தமிழக, தென்னிந்திய மாணவ - மாணவிகளை இழிவுபடுத்திய இந்தச் சோதனைகளிலும் மேட்டுக்குடி வர்க்கத் திமிரும், ஆதிக்கசாதி வெறியும், தமிழர்களுக்கு எதிரான காழ்ப்பும் கலந்துதான் வெளிப்பட்டிருக்கின்றன.

நீட் தேர்வைத் திடீரென்று திணிப்பதனால் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள் குறித்து உச்ச நீதிமன்றம் காட்டிய அலட்சியத்துக்கும், முழுக்கை சட்டையை வெட்டியெறிந்த சி.பி.எஸ்.இ. அதிகாரிகள் காட்டிய ஆணவத்துக்கும் ஏதேனும் வேறுபாடு தெரிகிறதா என்ன? இந்தச் சோதனைகள் மூலம் நீட் தேர்வு குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை, அதன் சொல்லிலும் உணர்விலும் அமல்படுத்தியிருக்கிறார்கள் சி.பி.எஸ்.இ அதிகாரிகள்.

● திப்பு

# இந்தித் திணிப்பு:
# “பிரிவினைவாதி மோடி!”

**இந்து-இந்தி-இந்தியா என்ற தனது கனவுத் திட்டத்தின் மூலம் இந்தியாவை உடைக்கும் வேலையைச் சுறுசுறுப்பாக முடுக்கிவிட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.**

மைய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக இருந்துவரும் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தியை ஒற்றை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவது; தமிழகம் உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களின் நிர்வாகம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய ஆதாரமான துறைகளில் இந்தி ஆதிக்கத்தைத் திணிப்பது எனும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளுக்கு அரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அவற்றை நாடாளுமன்றம் உள்ளிட்டு மைய அரசின் துறைகளுக்கும், மாநில அரசுகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைத்திருக்கிறது, மோடி அரசு.

1950-இல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியல் சாசனம், அடுத்த பதினைந்து ஆண்டுகளில் (1965-இல்) ஆங்கிலத்தை அலுவல் மொழியாகப் பயன்படுத்துவதை அகற்றிவிட்டு, இந்தியை மட்டும் அலுவல் மொழியாக்கப் பரிந்துரைத்தது. இந்த அடிப்படையில் அன்றிருந்த நேரு அரசாங்கம் இந்தியை மைய அரசின் ஒரே அலுவல் மொழியாக அறிவிக்க முயன்றதையடுத்துதான், தமிழகத்தில் மொழிப் போராட்டம் வெடித்தது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களும் நேரு அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்தன. மொழிப் போரில் தமிழக இளைஞர்களும் மாணவர்களும் செய்த தியாகத்தின் விளைவாகத்தான், ‘‘இந்தி பேசாத மாநிலங்கள் இந்தியை அலுவல் மொழியாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றும்வரை, இந்தியோடு, ஆங்கிலமும் மைய அரசின் அலுவல் மொழியாகத் தொடரும்’’ என்ற திருத்தம் இந்திய அரசின் அலுவல் மொழிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

இத்திருத்தம் கொண்டுவரப்பட்ட நாள் தொடங்கியே அதனைச் சிறுகச் சிறுகக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகளை மைய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்காகவே, மைய அரசின் அலுவல் மொழி தொடர்பான சட்டத்தின்கீழ் இந்தியை ஊக்குவிப்பதற்கான நாடாளுமன்ற குழு அமைக்கப்பட்டு, அக்குழு பல்வேறு பரிந்துரைகளை ஒன்றன்பின் ஒன்றாக அளித்து வருகிறது. இப்பொழுது அரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றிருக்கும் பரிந்துரைகள், அக்கமிட்டி அளித்திருக்கும் ஒன்பதாவது அறிக்கையாகும்.

இந்தியைத் திணிப்பதில் காங்கிரசு எட்டடி பாய்ந்தால், பா.ஜ.க. பதினாறு அடி பாயும். மேலும், இந்து மத வெறிக் கும்பலுக்கு நாடாளுமன்ற மக்களவையில் பெரும்பான்மை பலம் இருப்பதால், இந்தியைத் திணிக்கும் கயமைத்தனங்களைப் பதவியேற்றவுடனே தொடங்கிவிட்டது மோடி அரசு. மைய அரசு அதிகாரிகள் தமது அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளங்களில் இந்தி மொழியை மட்டுமே பயன்படுத்த வேண்டும், மைய அரசின் கோப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமின்றி, இந்தியிலும் தயாரிக்கப்பட வேண்டும் என அடுத்தடுத்து உத்தரவுகளை இட்ட பா.ஜ.க. அரசு, மைய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் இந்திப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான கமிட்டிகளை அமைத்தது. தேசிய நெடுஞ்சாலை மைல் கற்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைத் திணித்த மோடி அரசு, அதற்கு எதி

தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலை மைல்கற்களில் இந்தித் திணிப்பு.



ரான எதிர்வினைகள் அடங்கும் முன்பே, நாடு தழுவிய அளவில் இந்தியை மென் மேலும் வலுக்கட்டாயமாகத் திணிப்பது தொடர்பான 110 பரிந்துரைகளை வெளி யிட்டிருக்கிறது.



இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழக மாணவர்களும் இளைஞர்களும் நடத்திய மொழிப் போர். (கோப்புப் படம்)

● இந்தி மொழியைப் பாடத் திட்டங் களில் கட்டாயமாக்குவது தொடர்பாக மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் முதல்கட்டமாக, மைய அரசு பாட வாரியத்தின்கீழ் இயங்கும் (சி.பி.எஸ்.இ.) பள்ளிகள் மற்றும் மைய அரசு நேரடியாக நடத்திவரும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் அனைத்திலும் பத் தாம் வகுப்பு முடிய இந்தி மொழி பயிலு வதைக் கட்டாயமாக்க வேண்டும்.

● அனைத்திந்திய அளவில் இந்தி யைக் கட்டாய மொழிப்பாடம் ஆக்குவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் திட்டங்கள் வைக்கப் பட வேண்டும்.

● மாநில அரசுகள் நடத்தும் பள்ளிகளில் இந்தி யைக் கட்டாய மொழிப் பாடமாக்குவது தொடர்பாக மாநில அரசுகளோடு மைய அரசு கலந்து ஆலோசிக்க வேண்டும்.

● பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறு வனங்களில் ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாக இருந்து வருகிறது. இந்நிலையில், இந்தி வழி வகுப்பு களைத் தொடங்குவதற்கான செயல் திட்டத்தை வகுப் பதோடு, அதற்கேற்ப நாடாளுமன்றத்தின் இரு அவை களிலும் ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

● இந்தி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல் கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியில் தேர்வு எழுதவும், நேர்முகத் தேர்வு களை நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

● மைய அரசு நிறுவனங்கள் வெளியிடும் விளம் பரங்களில் ஐம்பது சதவீதம் இந்தி மொழியிலும் மீத முள்ள 50 சதவீதம் ஆங்கிலம் அல்லது பிராந்திய மொழிகளிலும் இருக்க வேண்டும்.

● இந்தி மொழி விளம்பரங்களை செய்தித் தாள் களின் முதல் பக்கத்தில் வெளியிட வேண்டும், ஆங் கில மொழி விளம்பரங்களை உட்பக்கங்களில் வெளி யிட வேண்டும்.

● குடியரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர்கள் ஆகி யோர் இந்தி மொழியைப் படிக்கவும், பேசவும் அறிந் திருக்கும் பட்சத்தில், அவர்கள் இந்தி மொழியில் மட் டுமே பேசவும், இந்தி மொழியில் மட்டுமே அறிக்கை களை வெளியிடவும் வேண்டும்.

இவை தவிர, மைய அரசின் ரயில்வே துறை, விமான போக்குவரத்துத் துறை, வெளியுறவுத் துறை ஆகியவற்றில் இந்திப் பயன்படுத்தப்படுவதை அதிக ரிப்பதற்குப் பல பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன. அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்ற நிலைக் குழு அளித்த 117 பரிந்துரைகளுள் 110 பரிந்துரை களுக்கு அரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்திருக்கிறார். மீதமுள்ள ஏழு பரிந்துரைகள் அவ ராலேயே நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், அவை எத்துணை கொடூர இந்தி ஆதிக்கச் சிந்தனையைக் கொண்டிருக்கும்?

நிராகரிக்கப்பட்ட பரிந்துரைகளுள் ஒன்று, நாடா ளுமன்றத்தில் ஆங்கிலத்தை ஒழித்துக் கட்டும் நோக் கத்தைச் சதித்தனமான முறையில் முன்வைக்கிறது. மற்றொன்று, நாடெங்கும் இந்தி வழி கல்விக்கூடங் கள் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கில் பிராந்திய மொழிகளுக்கோ, இந்திக்கோ முன்னுரிமை அளிக்காத ஆங்கில வழி பள்ளிக்கூடங்களுக்கு அங்கீ காரம் அளிக்கக்கூடாது என்கிறது. வேறொன்று, இந்தி மொழியைப் பயன்படுத்தாக மைய அரசு ஊழியர்களுக் குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்கிறது.

● ❍ ●

**த**மிழைப் பயிற்று மொழியாக, ஆட்சி மொழி யாக, நீதிமன்ற மொழியாகக் கொண்டுவர வேண்டும், அதற்கான அங்கீகாரம் தமிழுக்கு அளிக்கப்பட வேண் டும் எனத் தமிழகத்தில் கோரிக்கைகளும், அதற்கான போராட்டங்களும் நடந்துவரும் நிலையில், அதனை யெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதாமல், தமிழை

இந்தியாவை ஆரிய பார்ப்பன தேசமாக உருவாக்குவது காங்கிரசு, பா.ஜ.க.வின் தனிப்பட்ட விருப்பம் மட்டுமல்ல; இந்திய அரசியல் சாசனச் சட்டமே இந்து–இந்தி–இந்தியாவை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது.




தமிழை, சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்காடு மொழியாக அங்கீகரிக்கக் கோரி உயர்நீதி மன்ற வழக்குரைஞர்கள் நீதிமன்ற வளாகத்தினுள் நடத்திய போராட்டம். (கோப்புப் படம்)

இரண்டாம், மூன்றாம் நிலைக்குத் தள்ளக்கூடிய இப்பரிந்துரைகளைத் தமிழகத்தின் மீது திணித்துவிட முயற்சிக்கிறது, மோடி அரசு. தமிழகத்தின் பள்ளிக் கல்வியில் தமிழ் மொழி ஏற்கெனவே இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில், தமிழை ஒரு மொழிப் பாடமாகக்கூடப் படிக்காமல் உயர் கல்வியை முடித்து விடக் கூடிய அவலமான நிலை தமிழகத்தில் நிலவி வரும் நிலையில், மோடி அரசு அளித்துள்ள பரிந்துரைகள் எதிர்காலத்தில் தமிழுக்குப் பெருங்கேட்டினையே ஏற்படுத்தும்.

எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்கும் தமிழகத்தின் உரிமையைப் பறிக்கும் நீட் தேர்வு, முதுகலை மருத்துவப் பட்டப் படிப்பில் தமிழக அரசு மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இட ஒதுக்கீடு ரத்து, ஜி.எஸ்.டி. வரியை அறிமுகப் படுத்துவதன் மூலம் விற்பனை வரியை விதிக்கவும், வசூலிக்கவும் இதுகாறும் தமிழக அரசிற்கு இருந்து வந்த உரிமை பறிப்பு, ரேஷன் கடையில் அரிசி, பருப்பு வழங்குவதற்குக்கூட மைய அரசின் அனுமதி தேவை என்ற இழிநிலை - இப்படித் தமிழக அரசின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டுவரும் வேளையில், தமிழக மக்களை இரண்டாம்தர குடிமக்களாக, தமிழை இந்தி ஆதிக்கத்திற்கு அடிபணிந்து கிடக்கும் குற்றேவல் மொழியாக மாற்றும் தீய நோக்கத்தோடு இந்தி-இந்துவெறி பிடித்த மோடி அரசு இப்பரிந்துரைகளைத் தமிழகத்தின் மீது சுமத்தியிருக்கிறது.

தமிழ், தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தி பேசாத மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, ஒரிசா, பஞ்சாப், மேற்கு வங்கம், ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் உள்ளிட்ட இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களை, பெரும்பான்மையான மக்களை, அம்மக்களின் தாய்மொழிகளை இரண்டாம்தர நிலைக்குத் தள்ளும் அபாயகரமான சதித் திட்டம்தான் இப்பரிந்துரைகள். ஒரே தேசம், ஒரே பண்பாடு, ஒரே சந்தை என்ற இந்து மத வெறிக் கும்பலின் பேராசையின் நீட்சியாகத்தான் இந்தியை முதன்மைப்படுத்தும் இப்பரிந்துரைகள் கொண்டுவரப்படுகின்றன.

நாடு தழுவிய அளவில் இந்தியைத் திணிக்கும் இப்பரிந்துரைகள், தி.மு.க.வும் பங்கு பெற்றிருந்த காங்கிரசு கூட்டணி ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டன. அதனைக் காரணமாகக் காட்டி, வேறு வழியில்லாமல்தான் இப்பரிந்துரைகளை மோடி அரசு நடைமுறைப்படுத்துவதாகக் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது, இந்து மதவெறிக் கும்பல். இந்த வாதம் மிகப்பெரிய மோசடி, பார்ப்பனக் களவாணித்தனத்தின் வெளிப்பாடு.

காங்கிரசு இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் எனத் தேர்தலுக்குத் தேர்தல் முழக்கமிடும் மோடி, முந்தைய காங்கிரசு அரசால் உருவாக்கப்பட்ட இப்பரிந்துரைகளைக் கைவிட மறுப்பதேன்? திட்டக் கமிசன் உள்ளிட்டு காங்கிரசால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களை, திட்டங்களைக் கைகழுவிவரும் மோடி அரசு, காங்கிரசால் உருவாக்கப்பட்ட இப்பரிந்துரைகளை, மன்மோகன் சிங் அரசுகூட நடைமுறைப்படுத்தத் துணியாத இப்பரிந்துரைகளை நிறைவேற்றத் துடிப்பதேன்?

காரணம், அனைவரும் அறிந்ததுதான். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அதன் புத்தி போகாது என்பார்களே, அதுபோலத்தான் பா.ஜ.க.வும். மாநில உணர்வுகளை மதிக்கத் தெரிந்தவர் மோடி என அதன் சுயதம்பட்டமெல்லாம் மோசடியானது. உச்சி முதல் உள்ளங்கால் வரை இந்து-இந்தி, ஆரிய பார்ப்பன மேலாதிக்கம், சமஸ்கிருத வெறி கொண்டதுதான் அக்கட்சி. ஆட்சியைப் பிடித்தவுடன், ஆசிரியர் தினத்தை ''குரு உத்ஸ்வ்'' என சமஸ்கிருத மொழியில் மாற்றியது ஒன்றே அக்கட்சியின் ஆரிய பார்ப்பன வெறியை அம்பலப்படுத்திவிட்டது.

பல்வேறு தேசிய இனங்கள், மதச் சிறுபான்மையினர், பல்வேறு மொழிகள், பண்பாடு எனப் பன்முகம் கொண்டிருக்கும் இந்திய நாட்டை, இந்து-இந்தி -இந்தியா என்ற அடிப்படையில் ஒற்றைத் தேசமாக வலுக்கட்டாயமாக மாற்றியமைப்பதுதான்

மொழிப் போர் தியாகிகளை நினைவுகூர்ந்து புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் மக்களை கலை இலக்கியக் கழகமும் இணைந்து சென்னையில் நடத்திய பேரணி. (கோப்புப் படம்)



ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிஸ்டுகளின் இலட்சியம். அந்த அடிப்படையில் தான், பசுவதைச் சட்டத்தை நாடெங்கும் கொண்டுவர வேண்டுமெனத் துடிக்கிறார்கள். சமஸ்கிருதமயமான இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக மட்டுமல்ல, தேசிய மொழியாகவும் அறிவித்துவிட முயலுகிறார்கள். நாடெங்கும் ஒரே சமயத்தில் ஒரே தேர்தல் என்ற மாற்றத்தைக் கொண்டுவர விரும்புகிறார்கள். அரசியல் சாசனச் சட்டத்தின் 370-ஆவது பிரிவின்கீழ் காஷ்மீருக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்பு உரிமையை மட்டுமல்ல, மாநில அரசுகளுக்கு கல்வி, சுகாதாரம், பொது விநியோகம், வரி வசூலிப்பு உள்ளிட்ட துறைகளில் அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளையும் பறித்து, இந்திய யூனியன் என்பதைச் சட்டபூர்வமாகவே அழித்து, இந்தியாவில் ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்திவிடவும் திட்டமிடுகிறார்கள்.

இப்பார்ப்பன பாசிச நோக்கங்களை நிறைவேற்றுவதில் காங்கிரசுக்கும், பா.ஜ.க.வுக்கும் இடையே உள்ள வேறுபாடு, விஷத்தைப் பாலில் கலந்து நைச்சியமாகக் கொடுப்பதா, அல்லது நேரடியாக வாயில் ஊற்றுவதா என்பதுதான். மேலும், இந்தியாவை ஆரிய பார்ப்பன தேசமாக உருவாக்குவது இந்த தேசியக் கட்சிகளின் தனிப்பட்ட விருப்பம் மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனச் சட்டமே இந்து-இந்தி-இந்தியாவை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது. பசுவதைச் சட்டத்தைக் கொண்டுவருவது, இந்தியை ஆட்சி மொழியாகத் திணிப்பது, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையைப் பறிப்பது, கோயில் கருவறையில் சூத்திரச் சாதியினர் நுழைவதைத் தடை செய்வது - என பார்ப்பன பாசிஸ்டுகளின் நோக்கத்தை, மேலாதிக்கத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுதான் இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

‘‘வேற்றுமையில் ஒற்றுமை’’யாக இருந்துவரும் இந்தியாவை உடைக்க ‘‘பிரிவினைவாதிகள்’’, ‘‘பாக். கைக்கூலி’’களெல்லாம் தேவையில்லை. அந்த வேலையை மோடி அண்ட் கம்பெனியே சுறுசுறுப்பாகச் செய்து வருகிறது. தமது இந்து-இந்தி-இந்தியா திட்டத்தின் மூலம், அரசியல் சாசனத்தின் துணையோடு!

● குப்பன்

# “இந்தியாவோ, ஆஸ்திரேலியாவோ, முதலாளிகள் எங்கும் உள்ளூர் மக்களை அழிக்கிறார்கள்!”

**- அதானிக்கு எதிராக**
**ஒரு ஆஸ்திரேலிய விவசாயியின் எதிர்ப்புக் குரல்**

‘வளர்ச்சியின்’ நாயகன் நரேந்திர மோடி கடந்த 2014-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவிற்கு மேற்கொண்ட தமது முதல் பயணத்தின்போது, இந்தியப் பெருமுதலாளிகளில் ஒருவரும், தன்னைப் பிரதமராக்கியவருமான கவுதம் அதானியை உடன் அழைத்துச் சென்றார். சரியாகச் சொல்வதென்றால், குயின்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள கலீலி பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் உலகின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்களில் ஒன்றான சார்மிக்கேல் சுரங்கத்தைப் பேரம் பேசி முடித்துக் கொடுப்பதுதான் அப்பயணத்தின் பிரதான நோக்கம்.

அந்தச் சுரங்கத்தின் நிலக்கரி தரம் குறைந்தது என்றும், அதனை எரிப்பதால் கடுமையான சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு ஏற்படும் என்றும், சர்வதேசத் தரத்திற்கு உகந்ததல்ல என்பதனால் விற்பனை செய்ய முடியாது என்றும் கூறி, அதானியின் இத்திட்டத்திற்கு கடன் கொடுக்க எந்தத் தனியார் வங்கியும் முன்வரவில்லை. அதைவிட முக்கிய காரணம், அதானி குழுமம் ஏற்கெனவே பல்வேறு வங்கிகளில் சுமார் 72,000 கோடி ரூபாய் கடன் பாக்கி வைத்திருக்கிறது. ஆகையால், ஆஸ்திரேலிய பயணத்தின் போது பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் அருந்ததி பட்டாச்சாரியாவையும் கையோடு அழைத்துச் சென்று, அதானிக்கு சுமார் 6,500 கோடி ரூபாய் கடன் தருவதற்கும் ஏற்பாடு செய்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு வந்தார் மோடி.

ஆஸ்திரேலியாவில் அதானியின் நிலக்கரிச் சுரங்கம் அமையவுள்ள பகுதியைச் சேர்ந்த மக்கள் இச்சுரங்கத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலக்கரிச் சுரங்கத்தால் அருகில் உள்ள பவளப்பாறைகளுக்கும், நிலத்தடி நீருக்கும், சுற்றுச்சூழலுக்கும், அருகில் உள்ள விவசாயப் பகுதிகளுக்கும் ஏற்படவிருக்கும் பாதிப்பைக் கணக்

‘‘நிலக்கிரச் சுரங்கம் தேவையில்லை, பவளப் பாறைகள் வேண்டும்’’ என்ற முழக்கத்தை முன்வைத்து, இந்தியத் தரகு முதலாளி அதானி ஆஸ்திரேலியாவில் திறக்க முயலும் நிலக்கரிச் சுரங்கத்தை எதிர்த்து அந்நாட்டு மக்கள் பிரிஸ்பேனில் அமைந்துள்ள குயின்ஸ்லாந்து நாடாளுமன்றத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)





பிரதமரா, புரோக்கரா? - அதானிக்கு ஆஸ்திரேலிய சுரங்கத்தை முடித்துக் கொடுப்பது தொடர்பாக ஆஸ்திரேலிய நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நரேந்திர மோடி. (கோப்புப் படம்)

கில் கொண்டு, அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், எதிர்ப்புகளையெல்லாம் மீறி இச்சுரங்கத் தைத் தொடங்கிவிடத் துடிக்கிறார் அதானி.

ஆஸ்திரேலிய அரசின் மீது அதானி செலுத்துகின்ற செல்வாக்கைப் பார்த்து அதிர்ச்சியுற்ற ஆஸ்திரேலி யாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் ஆர்வலரும், சுரங்கம் வரவிருக்கும் பகுதியைச் சேர்ந்த கால்நடை விவசாயியுமான ப்ரூஸ் க்யூரி என்ப வர், நாம் எதிர்கொண்டிருப்பது என்ன மாதிரியான கம் பெனி என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், அதா னிக்கு எதிராக கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மை யானவைதானா என்று தெரிந்து கொள்வதற்காகவும் கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவிற்கு வந்திருக்கிறார். இங்கு குஜராத் மாநிலத்தில் உள்ள அதானியின் துறை முகம் மற்றும் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள முந்த்ரா, ஹசீரா ஆகிய கிராமங்களைப் பார்வையிட்டு அங்குள்ள உள்ளூர் மக்களின் கருத்துக்களைக் கேட்ட றிந்துமிருக்கிறார்.

நான் கண்ட காட்சிகள், என் முதுகுத்தண்டைச் சில் லிட வைத்தன. முந்த்ராவிலும் ஹசீராவிலும் உள்ள சிறு கிராமங்களுக்குச் சென்றேன். விவசாயிகளையும் மீனவர்களையும் சந்தித்தேன். எல்லாம் எங்கள் கதை யைப் போலவே இருந்தது. வேலை தருகிறோம், உள் ளூர்ப் பொருளாதாரத்தை முன்னேற்றுவோம் என்றெல் லாம் சொல்லிக்கொண்டு, பெரிய நிறுவனங்கள் உள் ளூர் மக்களை ஏமாற்றுகின்ற வழக்கமான கதைதான். கடைசியில் உள்ளூர் மக்களின் அழிவுதான் மிச்சமாக இருக்கும்.

- நிலத்தடி நீரை மாசுபடுத்தியது, சட்டவிரோத மாக நிலத்தைப் பறித்துக் கொண்டது, சதுப்புநிலக் காடுகளை அழித்தது என அதானியின் அட்டூழியங்க ளால் அப்பகுதி மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட் டுள்ளனர்.

- அதானி குழுமம் துறைமுகம் கட்டத்தொடங் கியதிலிருந்து அப்பகுதியில் கிடைக்கும் மீன்களின் அளவு 90% வரைக் குறைந்துள்ளதாக அப்பகுதி மீனவர் கள் தெரிவிக்கின்றனர். அங்கு கிடைக்கும் மீன்களும் துர்நாற்றம் அடிப்பவையாகவும், மோசமான சுவை கொண்டவையாக இருப்பதாகவும் மீனவர்கள் கூறி கின்றனர்.

- முந்த்ரா பகுதியில் அதானியின் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வரும் கரித்துகள்களால் அப்பகுதி விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வழக்கமாகப் பயிரிடும் ஆமணக்கு, பருத்தி ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அங்கிருக்கும் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் தங்களது வாழ்வாதாரமான நிலத்தடி நீர் மாசுபட்டிருப்பதையும், நீர்நிலைகள் தடுக் கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதானியின் நிலக்கரி திட்டப் பகுதியின் அருகா மையில் வசித்தவர்கள் அத்திட்டத்தால் இழந்ததே அதி கம். பலரும் அவர்களது வாழ்வாதாரங்களை இழந்தி ருக்கின்றனர். சிலர் நான் ஆஸ்திரேலியாவில் செய்து கொண்டிருப்பதைப் போல, இருக்கின்ற கொஞ்ச நஞ்ச சொத்தையும் விற்று அதானிக்கு எதிராக சட்டரீதியாகப் போராடியிருக்கிறார்கள். எனினும், சிறிய அளவு நட்ட ஈடே கிடைத்திருக்கிறது, இன்னும் சிலரோ அப்பகுதி களில் இருந்து வலிந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார் கள்.

அதானியின் இந்திய ஆக்கிரமிப்பையும், அதன் மூலமான சீரழிவையும் பார்க்கும் போது அதானியின் நிலக்கரிச் சுரங்கத்தால் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ் லாந்தில் ஏற்படவிருக்கும் விதிமீறல்களையும், நிலத் தடி நீர் அழிவையும் எதிர்பார்த்து தாம் அஞ்சுவதாகக் குறிப்பிடுகிறார் ப்ரூஸ் க்யூரி.

ப்ரூஸ் க்யூரியைப் போன்றே, ஆஸ்திரேலியா வின் கிரிக்கெட் ஜாம்பவான்களான கிரெக் சாப்பல், ஐயன் சேப்பல் சகோதரர்களும் இத்திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவர்கள் கூட்டாக அதா னிக்கு எழுதியுள்ள திறந்த மடலில், 'லான்செட்' எனப் படும் முன்னணி மருத்துவ இதழ் தனது அறிக்கையில் அதானியின் சார்மிக்கேல் சுரங்கத்தால், அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மிகப்பெரிய அளவில் சுகாதா ரக் கேடு ஏற்படும் என எச்சரித்துள்ளதைச் சுட்டிக்காட் டியுள்ளனர். மேலும் ஆஸ்திரேலிய மக்களின் விருப் பத்தை மீறி அரசின் துணையோடு அங்கு நிலக்கரிச் சுரங்கத்தை நிர்மாணித்தால், அது ஆஸ்திரேலிய மக் கள் மத்தியில் இந்தியாவின் மதிப்பைக் குலைப்பதாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளனர். இரு நாடுகளுக்கு இடையிலான நட்புணர்ச்சிக்கு கிரிக்கெட் ஒரு காரண மாக இருப்பதால், இந்த முதலீட்டைத் திரும்ப பெற் றுக் கொள்ளுமாறு தாங்கள் மிகுந்த மரியாதையுடன் கேட்டுக்கொள்வதாக குறிப்பிடுகிறார்கள் சாப்பல் சகோதரர்கள்.

சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாத, புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளில் முதலீடு செய்யுமாறும் அதானிக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் சாப்பல் சகோதரர்கள். இராமநாதபுரம் சூரியஒளி மின் திட்டத்தில் அதானி முதலீடு செய்திருப்பதை அவர்கள் அறிந்திருக்க மாட் டார்கள். அதானி அத்தகையதொரு முதலீடு செய்ய வேண்டுமானால், ஜெயலலிதாவைப் போல ஒன்றுக்கு இரண்டு விலை தரக்கூடிய ஒரு முதல்வரோ, அல் லக்கை வேலை பார்க்கின்ற ஒரு பிரதமரோ அங்கே இருப்பது அவசியம்.

● அழகு

# மோடியின் இந்தியாவும் தொழிலாளர்களின் இந்தியாவும்

**ஊதிய உயர்வு, பணிப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக நாடெங்கும் தொழிலாளர்கள் போராடிவரும்போது, பா.ஜ.க. ஆளும் அரசுகளோ தொழிற்தகராறு சட்டத்தையே ஒழித்துவிட முயலுகிறார்கள்.**

பா.ஜ.க.வின் அரியானா முதலமைச்சர் கட்டார், மே நாளை இனி தொழிலாளர் தினமாக அனுசரிக்கப் போவதில்லை என்றும் விசுவ கர்மா தினத்தைத்தான் இனி கொண்டாடவிருப்பதாகவும் அறிவித்தி ருக்கிறார். சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்று விடாது. மே தினத்தைத் தடுத்தால் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டம் செய லற்றுப் போய்விடாது.

வேலை நீக்கம், பொய்வழக்குகள், சிறை ஆகியவற்றை மீறி, கடந்த 4 மாதங்களில் மட்டும் இந்தியா முழுவதும் நூற்றுக்கும் மேற் பட்ட போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு தருகிறோம்.

**பீகாரில் போராடிய தொழிலாளர்கள் மீது போலீசு துப்பாக்கிச் சூடு!**

பீகாரின் மோட்டிஹாரி நகரில் உள்ள பிர்லாவுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலை உள்ளது. கடந்த 20022005 காலகட்டத்தில் அங்கு வேலை பார்த்த சுமார் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக் குச் சம்பளமும், கரும்பு சப்ளை செய்த சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குக் கரும்புக்கான பணமும் கொடுக்காமல் 2005-ஆம் ஆண்டு மூடப்பட்டது அந்த ஆலை. இது குறித்த வழக்கில் உச்ச நீதி மன்றம் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பிர்லா நிறுவனம் பணத்தைக் கொடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தும், அவர் களுக்குத் தர வேண்டிய பணத்தை பிர்லா நிறுவனம் தரவில்லை.

இது குறித்து மனு கொடுத்தும், பல்வேறு போரட்டங்கள் நடத் தியும் பீகார் அரசு கண்டுகொள்ளவில்லை. அதனைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் 11 அன்று ஆலை வாயி லில் தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒன்றுதிரண்டு போராடத் தொடங்கினர். அரசின் அலட்சியத்தையும், பிர்லா நிறு வனத்தின் இரக்கமற்ற போக்கையும் கண்டித்து இரண்டு தொழிலாளர்கள் தீக்குளித்தனர். அதில் ஒருவர் மருத்துவ மனையில் மரணமடைந்த செய்தியறிந்த தும், தொழிலாளர்களும் விவசாயிகளும் கற்களைக் கொண்டு ஆலையைத் தாக்கி னர். அத்தொழிலாளர்கள் மற்றும் விவசா யிகள் மீது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுமார் 24 தொழிலாளர்கள் படு காயமடைந்தனர். இருப்பினும் அரசின் ஒடுக்குமுறைக்கு அஞ்சாமல், போராட் டம் தொடரும் என விவசாயிகளும் தொழிலாளர்களும் அறிவித்துள்ளனர். தொழிலாளர்களும் விவசாயிகளும் கட் டியமைத்திருக்கும் இந்த ஒற்றுமை முன் னுதாரணமானது.

அரியான அரசின் புதிய போக்குவரத்துக் கொள்கை நகலை எரித்து, பதேஹாபாத் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் அம்மாநில போக்குவரத்துத் தொழிலாளர்கள்.



**அரியானா அரசைப் பணிய வைத்த போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டம்!**

அரியானா மாநிலப் போக்குவரத் துத் தொழிலாளர்கள், போக்குவரத்துத் துறையை தனியார்மயமாக்கும் அரி யானா அரசின் புதிய போக்குவரத்துக் கொள்கைக்கு எதிராக கடந்த ஏப்ரல்-9 முதல் மாநிலம் முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். முதல் 3 நாட் கள் தொழிலாளர்களின் போராட்டத்தை அலட்சியப்படுத்திய அரியானா அரசு, பிறகு தொழிலாளர்களை மிரட்டும் வித மாக 120 பேரை இடைநீக்கம் செய்தது. தொழிலாளர்கள் போராட்டத்தைத் தீவி ரப்படுத்தியை அடுத்து, புதிய போக்கு வரத்துக் கொள்கையைக் கைவிடுவதாக வும், பணியிடை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்வதாகவும் அரியானா அரசு ஒப்புக் கொள்ள நேர்ந்தது.

**அரசைப் பணிய வைத்த பெங்களூரு அங்கன்வாடித் தொழிலாளர்களின் போராட்டம்!**

கடந்த மார்ச் மாதம் அங்கன்வாடி யில் வேலை பார்க்கும் ஊழியர்களும், அங்கன்வாடி உதவியாளர்களும் ஊதிய



ஊதிய உயர்வு உள்ளிட்ட அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்துப் பத்தாயிரத்துக்கும் அதிகமான கர்நாடக மாநில சத்துணவுப் பணியாளர்கள் பெங்களூரு நகர சுதந்திர பூங்காவில் 48 மணி நேரம் நடத்திய முழக்கப் போராட்டம். பெங்களூரு நகரில் நடந்த மிகப் பெரிய, நீண்டதொரு போராட்டமாகும் இது.

உயர்வு வேண்டி பெங்களூருவின் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மார்ச் 22-இல் தொடங்கி 20 நாட்கள் நீடித்த இந்த போராட்டத்தின் உறுதியால் கர்நாடக காங்கிரசு அரசு பணிந்து போனது. இப்போராட்டத்தின் மூலம் அங்கன்வாடி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதியம் ரூ.6,000-லிருந்து ரூ.8,000-மாகவும், உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதியம் ரூ.3,500-லிருந்து ரூ.4,500-ஆகவும் உயர்த்தப்பட்டது. அங்கன்வாடி ஊழியர்களின் இடைவிடாத போர்க்குணமிக்க போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி இது.

**ராஜஸ்தான்: ஒப்பந்தத் தொழிலாளிகளுக்காகப் போராடிய நிரந்தரத் தொழிலாளர்கள் பணிநீக்கம்!**

ராஜஸ்தான் மாநிலம் தாருஹெராவில் உள்ள ஓமாக்ஸ் தொழிற்சாலை, ஹீரோ, ஹோண்டா, யமஹா போன்ற நிறுவனங்களுக்கு ஆட்டோமொபைல் உதிரிப் பாகங்களைத் தயாரிக்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் சுமார் 388 ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்தது ஓமாக்ஸ் நிறுவனம். பணிநீக்கம் செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் அனைவரும் அந்நிறுவனத்தில் சுமார் 15 முதல் 20 ஆண்டுகள் வரை வேலை பார்த்தவர்கள். பணிநீக்கம் செய்யப்பட்ட அஜய் பாண்டே என்ற 35 வயது இளைஞர் மன முடைந்து தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல என்றும் அவர் மனநோயாளி என்றும் அவதூறு செய்தது நிர்வாகம். வெகுண்டெழுந்த தொழிலாளர்கள், பாண்டேயின் குடும்பத்தாருக்கு நட்டஈடு தர வேண்டும் என்றும், பணிநீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து ஓமாக்ஸ் நிறுவனத்தின் வாயிலில் அஜய் பாண்டேயின் சடலத்தைக் கிடத்தி போராடத் தொடங்கினர். ஒப்பந்த தொழிலாளர்களுடன் சேர்ந்து நிரந்தரத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை அறிவித்தனர். ரிக்கோ ஆட்டோ பிட், டாய்கின் போன்ற நிறுவனங்களின் தொழிலாளர்களும் போராட்டத்தில் இணைந்து கொள்ளவே நிர்வாகம் பணிய வேண்டியதாயிற்று.

அஜய் பாண்டே குடும்பத்தினருக்கு 5.5 லட்சம் ரூபாய் நட்டஈடு கொடுப்பதற்கும், ஒப்பந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்வது குறித்து தொழிலாளர் நலத்துறையுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டது. அதனைத் தொடர்ந்து போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இச்சம்பவத்திற்குப் பின்னர் போராட்டத்தில் முன்னணியாக செயல்பட்ட 34 நிரந்தரத் தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்து பழி வாங்கியிருக்கிறது, ஓமேக்ஸ் நிர்வாகம்.

**டில்லி அரசின் மெத்தனத்தைக் கலைத்த துப்புரவுத் தொழிலாளர்கள்!**

டில்லி மாநகராட்சியில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் 17,000 தொழிலாளர்கள் உட்பட சுமார் 25,000 மாநகராட்சித் தொழிலாளர்களுக்கு கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்கான சம்பளத்தை வழங்காமல் இழுத்தடித்து வந்த டில்லி மாநகராட்சியைக் கண்டித்து, கடந்த ஜனவரி மாதம் 6-ஆம் தேதி முதல் வேலை நிறுத்தத்தை அறிவித்தனர், துப்புரவுத் தொழிலாளர்கள். வேலை நிறுத்தம் தொடங்கிய ஐந்தே நாட்களில் டில்லி நகரமே குப்பைக் காடானது. தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தலையிட்டு டில்லி அரசையும், மத்திய அரசையும் இப்பிரச்சினைக்கு உடனடியாக எப்படியேனும் தீர்வு காணும்படி வலியுறுத்தியது. இதனையடுத்து பேச்சுவார்த்தைக்கு வந்த டில்லி அரசு, தொழிலாளர்களுக்கு நிலுவைச் சம்

''எங்கே போனது எங்கள் சம்பளப் பணம்?'' என்ற முழக்கத்தை முன்வைத்து டெல்லி நகர தூய்மைப் பணியாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



பளத்தை வழங்கியதோடு, இனி சம்ப ளம் வழங்குவதில் தாமதம் ஏற்படாது என உறுதியளித்தது. சுமார் 11 நாட்கள் நீடித்த இப்போராட்டத்தின் தாக்கம் துப்புரவுப் பணியாளர்களின் முக்கியத்துவத்தையும் ,அவர்களது வாழ்வின் அவலத்தையும் டில்லி நகரவாசிகளுக்கு உணர்த்துவதாக அமைந்தது.

**ஜார்க்கண்ட் : பா.ஜ.க. அரசில்
துப்புரவுப் பணியாளர்களுக்கு
3 ஆண்டுகளாகச் சம்பளமில்லை!**

சுரங்கப் பகுதி வளர்ச்சிக் குழுமம் என்ற அமைப்பு சுரங்கப் பகுதிகளின் குடிநீர் மற்றும் துப்புரவுப் பணிகளைப் பராமரிக்கின்ற சுமார் 1,150 ஊழியர்களைக் கொண்ட அரசுத் துறை. இந்த ஊழியர்களுக்கு 3 ஆண்டுகளாக முறையாக மாதச் சம்பளமே தரப்படவில்லை. இதன் காரணமாக, இரண்டு ஊழியர்கள் பட்டினியால் இறந்திருக்கின்றனர். கனிம வளம் நிறைந்த அந்த மாநிலத்தில் காசுக்கு என்ன பஞ்சம்? மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்கும் பழங்குடி மக்களைக் காட்டை விட்டு விரட்டுவதற்கும் பணத்தைக் கொட்டுகின்ற பா.ஜ.க. அரசாங்கத்திடம் துப்புரவுத் தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்க பணம் இல்லையாம். இதுதான் மோடியின் சுவச் பாரத்.



ஊதியத்தைத் தரமறுத்து வந்த மோதிஹரி பிர்லா சர்க்கரை ஆலை நிர்வாகத்தைக் கண்டித்துத் தீக்குளித்து இறந்து போன சங்கத் தலைவர் நரேஷ் சிறீவத்ஸவாவின் (படத்தில்) மனைவி பூர்ணிமா தேவி.

**குஜராத்தில் தொழிலாளிகள் நடந்து போனால்,
முதலாளிக்கு பயமாம்!**

குஜராத்தில் சனந்த் நகரில் உள்ள டாடாவின் நானோ கார் தொழிற்சாலையில் தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு அளிக்க மறுத்து வருகிறது டாடா நிர்வாகம். அலுவலக ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்கும் நிர்வாகம், தொழிலாளிகளுடைய ஊதிய உயர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மட்டும் இரண்டு ஆண்டுகளாக மறுத்து வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில், கம்பெனி பஸ்ஸில் ஏறமாட்டோம், நடந்தே வீடு செல்கிறோம் என்று அறிவித்தார்கள் தொழிலாளர்கள். பேருந்து செலவு மிச்சம் என்று மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக கவலையடைந்திருக்கிறது டாடா நிர்வாகம். கூட்டமாக நடந்து போகக்கூடாது என்று தொழிலாளிகளுக்கு 144 தடை உத்தரவு போட்டிருக்கிறது பா.ஜ.க. அரசின் மாவட்ட நிர்வாகம். தொழிலாளிகள் கூட்டமாகச் சேர்வது பற்றி அவ்வளவு பயம், முதலாளி வர்க்கத்துக்கு! தொழிலாளிகளுக்கும் ஐ.டி. ஊழியர்களுக்கும் ''பிக் அப் டிராப்'' வசதிகளை நிர்வாகம் செய்து கொடுப்பதற்கான காரணம் என்னவென்பது, 144 போடும் போதல்லவா புரிகிறது!

**தொழிற்தகராறு சட்டத்தையே ஒழிக்க
பா.ஜ.க. வின் சதித்திட்டம்!**

தொழிற்தகராறு சட்டம் என்று அழைக்கப்படும் சட்டத்தின்கீழ், தொழிற்சாலை, தொழிலாளி என்ற சொற்களுக்கான விளக்கத்தைக் கடந்த 1978-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வரையறுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஆலைத் தொழிலாளர்கள் மட்டுமின்றி, துப்புரவுத் தொழிலாளர்கள் முதல் மருத்துவமனை ஊழியர்கள், கல்வி நிறுவன ஊழியர்கள் வரையிலான சேவைத் துறைகள் சார்ந்தவர்களும் தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் வருவதால், குறைந்தபட்ச ஊதியம், பணி உத்திரவாதம் உள்ளிட்ட உரிமைகளைப் பெறுகின்றனர். சமீபத்தில் டி.சி.எஸ். நிறுவனம் நடத்திய ஆட்குறைப்பின் போது, ஐ.டி. ஊழியர்களுக்கு தொழிற்சங்க உரிமை கிடையாது என்று அந்நிறுவனங்கள் கூறியதை எதிர்த்து வழக்கு தொடுத்து, ஐ.டி. நிறுவனங்களும் தொழிற்தகராறு சட்டத்தின் கீழ்தான் வருகின்றன என்றும் அந்த ஊழியர்களுக்கும் தொழிற்சங்க உரிமை உண்டு என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்றது புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி.

''தொழில்'' என்பதற்கான பொருளை மறு வரையறை செய்வதன் மூலம், 1978 தீர்ப்பு தொழிலாளிகளுக்கு அளிக்கும் உரிமைகளை ஒழித்துக்கட்டுவதற்கு மோடி அரசு முயற்சித்து வருகிறது. நாடாளுமன்றத்தில் நேரடியாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தால், தொழிலாளி வர்க்கம் தன்னை எதிரி என்று அடையாளம் கண்டுவிடும் என்ற காரணத்தினால், அந்த வேலையை நீதிமன்றத்தின் மூலம் சாதித்துக் கொள்வதற்குச் சதித்தனமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

உற்பத்தி சார்ந்த தொழிற்சாலை தவிர, மற்ற அனைத்தையும் இச்சட்டத்தின் வரையறையிலிருந்து நீக்க வேண்டும் என்றும், அதன் பொருட்டு 1978 தீர்ப்பை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களான அரியானா, குஜராத், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 250-க்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்துள்ளன. உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள் தவிர, மற்ற எல்லாத் தொழில்களையும் அமைப்பு சார்ந்த தொழில்கள் என்ற வரையறையிலிருந்தே நீக்குவதுதான் இவர்களது நோக்கம்.

● கதிர்

# காஷ்மீர்:
# தெருக்களே வகுப்பறை! கற்களே பாடநூல்கள்!!

**பள்ளி மாணவ-மாணவிகளையும் தெருவுக்கு இழுத்து வந்ததன் விளைவாகச் சந்தியில் நிற்கிறது மோடி அரசு.**

இந்திய அரசுக்கு எதிராக, குறிப்பாக நரேந்திர தாமோதர தாஸ் மோடி தலைமையில் அமைந்துள்ள இந்து மதவெறி பாசிச அரசுக்கு எதிராக, ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியைப் பிரசவிக்கும் தருணத்தில் இருக்கிறது காஷ்மீர் பள்ளத்தாக்கு. கடந்த ஓரிரு மாதங்களில் அங்கு நடந்த மூன்று சம்பவங்கள், எந்த நேரத்திலும் வெடிக்கக் காத்திருக்கும் எரிமலை போல காஷ்மீர் குமுறிக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டியுள்ளன. ''காஷ்மீர் நம் கையைவிட்டுப் போய்விடுமோ?'' என முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம், முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் உள்ளிட்டுப் பலரும் பதறி நிற்கும் அளவிற்கு அம்மூன்று சம்பவங்களும் ''இந்து'' இந்தியாவின் ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைக்கும் சவால்விட்டுள்ளன.

முதல் சம்பவம், கடந்த மார்ச் மாதம் பட்காம் மாவட்டத்தில் நடந்தது. அம்மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் தலைமறைவாகப் பதுங்கியிருந்த ஒரு போராளியைச் சுட்டுக் கொல்வதற்காக வந்த இந்திய இராணுவத்தைத் தடுத்து நிறுத்திய அக்கிராம மக்கள், அப்போராளியைத் தப்ப வைக்கும் நோக்கில் இராணுவச் சிப்பாய்களைக் கற்களைக் கொண்டு தாக்கினர். அச்சமயத்தில் இராணுவத்துக்கும் கிராம மக்களுக்கும் இடையே நடந்த மோதலில், மூன்று பேர் கொல்லப்பட்டனர், 18 பேர் படுகாயமடைந்தனர். கிராம மக்களின் இரத்தத்தில் தனது பூட்ஸ் கால்களை நனைத்த பிறகுதான், அந்தப் போராளியை இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்ல முடிந்தது.

சிறீநகரிலுள்ள அரசு கல்லூரி மற்றும் அரசு மேநிலைப் பள்ளி மாணவிகள் லால் சௌக் பகுதியில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்து நடத்திய போர்.



''முன்பெல்லாம் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் நடக்கும்போது, பொதுமக்கள் அந்த இடத்திலிருந்து விலகி ஓடிவிடுவார்கள். இப்பொழுதோ பொதுமக்கள் தீவிரவாதிகளின் கேடயமாக மாறி, இராணுவத்தை எதிர்த்து நிற்கிறார்கள்'' என இப்புதிய நிலைமையைப் பற்றி பத்திரிகையாளர் ஷூஜாத் புகாரி குறிப்பிடுகிறார்.

இரண்டாவது சம்பவம், ஏப்ரல் மாதத்தில் சிறீநகர் மற்றும் ஆனந்த்நாக் நாடாளுமன்ற இடைத்தேர்தல்களையொட்டி நடந்தது. 35,000 வாக்காளர்களை மட்டுமே கொண்டுள்ள சிறீநகர் இடைத்தேர்தலை நடத்துவதற்கு 17,000 சிப்பாய்களை இறக்கியிருந்தது, இந்திய அரசு. தேர்தலுக்கு முதல்நாள் இணைய தள சேவையும் அரசால் தடை செய்யப்பட்டது. ஆனாலும், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஏப்ரல் 9 அன்று சிறீநகர் இடைத்தேர்தலை ''அமைதியான'' முறையில் நடத்தி முடிக்க முடியவில்லை. அத்தேர்தலை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டங்களின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைக்கு மத்தியில் ஏப்ரல் 9 அன்று நடந்த சிறீநகர் இடைத்தேர்தலில் வெறும் ஏழு சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகின. அத்தொகுதியின் சில வாக்குச்சாவடிகளில் ஏப்ரல் 12 அன்று நடத்தப்பட்ட மறுவாக்குப் பதிவில் வெறும் இரண்டு சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகின. 28 வாக்குச் சாவடிகளில் ஒரு வாக்குகூடப் பதிவாகவில்லை. ''காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரவாதம் உச்சத்தில் இருந்த நேரத்தில்கூட, இவ்வளவு குறைவான வாக்குகள் பதிவானதில்லை'' எனக் குறிப்பிட்டுள்ள காஷ்மீர் பத்திரிகையாளர்கள், ''இத்தேர்தல் புறக்கணிப்பு 1989 காலகட்டத்திலிருந்து வேறுபட்டது, காஷ்மீர் முசுலீம்களின் தன்னெழுச்சியான எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு'' எனச் சுட்டிக் காட்டுகிறார்கள்.



சீறிநகரில் அரசுப் படைகளைக் கல்லெறிந்து விரட்டும் கல்லூரி மாணவர்கள்.

90 சதவீதத்துக்கும் மேலான வாக்காளர்களால் புறக்கணிக்கப்பட்ட சிறீநகர் இடைத்தேர்தல் முடிவும் கூட, அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க.-பி.டி.பி. கூட்டணிக்கு எதிரானதாகவே அமைந்தது. அத்தேர்தலில் காங்கிரசு-தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணி வேட்பாளரான பரூக் அப்துல்லா வெற்றி பெற்றார். ஆனந்த்நாக் இடைத்தேர்தலில் இதைவிடத் தீவிரமான எதிர்ப்பையும், தோல்வியையும் ஆளுங்கூட்டணி சந்திக்க வேண்டியிருக்கும் என்ற நிலையில், மோடியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக இடைத்தேர்தலையே காலவரையின்றி ஒத்திவைத்துவிட்டது, இந்தியத் தேர்தல் ஆணையம்.

இவ்விரண்டு சம்பவங்களைக் காட்டிலும், ஏப்ரல் 24 அன்று சிறீநகரில் நடந்த கல்லூரி, பள்ளி மாணவிகளின் போராட்டம்தான் ஆளுங்கும்பலையும் தேசியவாதிகளையும் திகைப்பிலும் அச்சத்திலும் ஆழ்த்தியது. அந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற ஒரு மாணவி, தனது ஒரு கையில் கூடைப்பந்தையும், இன்னொரு கையில் கல்லையும் ஏந்தியிருந்தார். அப்போராட்டத்தில் கற்களைக் கையில் ஏந்தியிருந்த ஒவ்வொரு மாணவியின் முதுகிலும் புத்தகப் பை இருந்தது. ‘‘கணினியை ஏந்த வேண்டிய காஷ்மீர் இளைஞர்கள், கற்களைத் தூக்குவதா?’’ என முதலைக் கண்ணீர் வடித்த மோடிக்கு, ‘‘நாங்கள் புத்தகப் பையையும் சுமப்போம், கல்லையும் ஏந்துவோம்’’ என காஷ்மீர் மாணவிகள் பதிலடி கொடுத்துள்ளனர்.

சிறீநகர் மாணவிகள் போராட்டத்தின் தொடக்கப் புள்ளி புல்வாமா கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டமாகும். கடந்த ஏப்ரல் 12 அன்று புல்வாமா அரசுக் கல்லூரிக்குள் நுழைந்து சோதனையிட முயன்ற இராணுவத்தை எதிர்த்து அக்கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். கண்ணீர் புகை குண்டுகளையும், பாவா (PAVA) என அழைக்கப்படும் மூச்சைத் திணறச் செய்யும் குண்டுகளையும் கொண்டு மாணவர்களைத் தாக்கிய அரசுப் படைகளை, அவர்கள் கற்களைக் கொண்டு தடுத்து நிறுத்தினர்.

இராணுவத்துக்கும் மாணவர்களுக்கும் இடையே நடந்த அம்மோதலில் 40 மாணவிகள் உள்ளிட்டு, 64 மாணவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்த மாணவர்களை மருத்துவமனைக்குத் தூக்கிவரச் சென்ற அவசர ஊர்தியின் ஓட்டுநர், ‘‘எனது வண்டி கல்லூரிக்குள் நுழைவது போல எனக்குத் தோன்றவில்லை. மாறாக, ஒரு போர்க்களத்திற்குள் நுழைந்தது போல இருந்தது’’ என்கிறார். இந்திய இராணுவம், கல்லூரி மாணவர்கள் மீது நடத்திய தாக்குதலின் தீவிரத்தையும் கொடூரத்தையும் அந்த ஓட்டுநரின் வார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள சிறீநகர், பந்திபோரா, பாரமுல்லா, ஆனந்த்நாக், புல்வாமா, குப்வாரா, குல்காம், சோபியன் மாவட்டங்களில் கல்லூரி மாணவர்களின் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களுக்கு முகங்கொடுக்க முடியாத மாநில அரசு, அனைத்துக் கல்லூரிகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை அளித்து, மாணவர்களின் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியில் இறங்கியது.

ஆனால், கல்லூரிகள் திறக்கப்பட்ட ஏப்ரல் 24 அன்றே சிறீநகரிலுள்ள அரசு மகளிர் கல்லூரி மற்றும் அரசு மேநிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் போராட்டத்தில் இறங்கி, மாநில அரசின் முகத்தில் கரியைப் பூசினர். இந்தப் போராட்டத்தைத் தடுக்க முயன்ற பேராசிரியர்களை, ‘‘நீங்கள் மாடா, இல்லை மனுசங்களா?’’ என எதிர்த்துக் கேட்டு, மாணவிகள் நையாண்டி செய்துள்ளனர்.

கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி போராட்டத்தைக் கலைக்க முயன்ற போலீசைக் கற்களைக்

பெல்லட் குண்டுகளால் தாக்கப்பட்ட காஷ்மீரி முசுலீம்கள். (கோப்புப் படம்)



**காஷ்மீர் முசுலீம்களும் மாணவர்களும் இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ முடியாது, கல்வி பயில முடியாது என்றால், இந்திய அரசு காஷ்மீரைச் சொந்தம் கொண்டாடுவதற்கு, அதனை அடக்கி ஆளுவதற்கு என்ன தகுதியும் உரிமையும் இருக்கிறது?**

கொண்டு தாக்கிப் பின்வாங்கச் செய்த மாணவிகள், போலீசின் கவச வாகனங்களைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். அன்று, சிறீநகரின் புகழ்பெற்ற லால் சௌக் பகுதி முழுவதும் போராடிய மாணவிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததாகக் கூறுகிறார்கள், அப்பகுதி வணிகர்கள்.

● ❍ ●

**க**டந்த ஆண்டு ஜூலையில் இந்திய முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த புர்ஹான் வானி என்ற இளம் வயது போராளி இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து வெடித்த காஷ்மீர் மக்களின் கலகம் இன்னமும் தணிந்துவிடவில்லை. இக்கலகத்தை ஒடுக்க ஜூலை 2016 தொடங்கி டிசம்பர் 2016 முடியவுள்ள ஆறு மாத காலத்தில் மட்டும் காஷ்மீர் முசுலீம்களின் மீது 1,60,000 கண்ணீர்ப் புகை குண்டுகளும், பாவா குண்டுகளும் வீசப்பட்டுள்ளன. இவையல்லாமல், பல இலட்சம் பெல்லட் குண்டுகளால் காஷ்மீர் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். இளைஞர்கள், சிறுவர்கள் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட காஷ்மீரிகள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். பெல்லட் குண்டுகள் தாக்கி கண்பார்வையை இழந்து போனவர்களின் எண்ணிக்கையோ ஆயிரத்தைத் தாண்டுகிறது. பொது பாதுகாப்புச் சட்டம் என்ற கருப்புச் சட்டத்தின் கீழ் எட்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணையின்றிச் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இத்துணைக்கும் பிறகுதான் மேலே கூறப்பட்டுள்ள மூன்று சம்பவங்களும் நடந்துள்ளன.

“காஷ்மீர் மக்கள் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களை எல்லாத் திசைகளிலும் நசுக்கி வருகிறது, அரசு. இந்த நிகழ்வுகளைப் பார்த்துவிட்டு, எங்களால் எப்படி ஒதுங்கிப் போய்விட முடியும்? காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதற்கான நேரம் வந்துவிட்டது” எனக் கூறுகிறார் பன்னிரெண்டாவது படிக்கும் ஒரு மாணவி. இந்திய அரசுக்கு எதிரான வெறுப்பையும் விடுதலை வேட்கையையும் கொண்ட இந்த மாணவர்களை, இளைஞர்களை வேலைவாய்ப்பு, வளர்ச்சி என்ற வார்த்தை ஜாலங்களைக் கொண்டோ, துப்பாக்கி தோட்டாக்கள், பெல்லட் குண்டுகள், கருப்புச் சட்டங்கள், சிறை தண்டனை - என நீளும் அடக்குமுறையின் மூலமோ வீழ்த்திவிட முடியாது என்பதை இந்திய ஆளுங்கும்பல், குறிப்பாக மோடி அரசு உணர மறுக்கிறது. மாறாக, இந்தியாவின் மீது இன்னமும் கொஞ்சநெஞ்சம் நம்பிக்கை வைத்திருப்பவர்களையும்கூடத் தமது அடக்குமுறையின் மூலமாக போராளிகள் பக்கம் தள்ளிவிடும் நல்ல காரியத்தைச் செய்து வருகிறது. அதற்கு உதாரணமாக இருப்பவர்தான் 26 வயதான பரூக் அகமது தர்.

இந்திய ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து சிறீநகர் இடைத்தேர்தலில் வாக்களித்த 7 சதவீத காஷ்மீர் முசுலீம்களுள் பரூக் அகமது தர்ரும் ஒருவர். வாக்களித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பரூக் அகமது தர்ரைப் பிடித்த இந்திய இராணுவச் சிப்பாய்கள், அவரைத் துப்பாக்கியாலும், தடிகளாலும் மயங்கிச் சரியும் அளவிற்குத் தாக்கியுள்ளனர். அரை மயக்க நிலையில் இருந்த அவரை, ஒரு இராணுவ ஜீப்பின் முன்பகுதியில் உட்கார வைத்து, இறுகக் கட்டி, “இராணுத்தின் மீது கல்லெறிபவர்களுக்கு இந்தக் கதிதான் ஏற்படும்” என ஒலிபெருக்கியில் எச்சரிக்கை செய்துகொண்டே இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் வழியாக அவரை இழுத்துச் சென்று அவமானப்படுத்தி, பீதியூட்டி அதன் பிறகு விடுவித்திருக்கிறது, இந்திய இராணுவம்.

இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்துபோய், தனது வீட்டைவிட்டு வெளியே வரவே அச்சப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பரூக் அகமது தர், “நான் செய்த குற்றமென்ன?” எனப் புலம்பி வருகிறார். காஷ்மீரியாக, அதுவும் முசுலீமாக இருப்பதே குற்றம் எனக் கொக்கரிக்கிறது, இந்து மதவெறிக் கும்பல்.

இந்திய இராணுவத்தின் அட்டூழியம்: ஜீப்பில் கட்டி வைத்து இழுத்துச் செல்லப்படும் பரூக் அகமது தர்.




**இந்தியாவின் மீது இன்னமும் கொஞ்சநெஞ்சம் நம்பிக்கை வைத்திருப்பவர்களையும்கூடத் தமது அடக்குமுறையின் மூலமாக போராளிகள் பக்கம் தள்ளிவிடும் நல்ல காரியத்தைச் செய்து வருகிறது, மோடி அரசு. அதற்கு உதாரணமாக இருப்பவர்தான் 26 வயதான பரூக் அகமது தர்.**

மோடி அரசின் தலைமை வழக்குரைஞர் முகுல் ரோத்தகி, ''காதலிலும் போரிலும் அத்துமீறல்களெல்லாம் வாடிக்கையாக நடப்பதுதான்'' என அலட்சியமாகப் பதில் அளித்து, பரூக் அகமது தர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நியாயப்படுத்துகிறார்.

இந்திய இராணுவம் கடந்த முப்பது ஆண்டுகளாக காஷ்மீர் முசுலீம்களுக்கு இழைத்திருக்கும் அநீதிகளைக் கண்டிக்கவோ, அதனால் பாதிக்கப்பட்ட காஷ்மீரி முசுலீம்களுக்கு நீதி வழங்கவோ தயாராக இல்லாத உச்ச நீதிமன்றம், கற்களைக் கீழே போடுமாறு காஷ்மீர் இளைஞர்களுக்குக் கட்டளையிடுகிறது. பெல்லட் குண்டுகளுக்குப் பதிலாக வேறு எந்தச் சனியனைக் கொண்டு காஷ்மீர் இளைஞர்களை அடக்கி ஆளலாம் என மூளையைக் கசக்கி வருகிறது.


சிறீநகர் நாடாளுமன்றத் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலின்போது, ஓட்டுப்போட ஒருவர்கூட வராமல் வெறிச்சோடிப் போன ஒரு வாக்குச்சாவடி.

ஆர்.எஸ்.எஸ். வானரப் படையைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமியோ இன்னும் ஒருபடி மேலே சென்று, காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் வாழும் முசுலீம்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி, முகாம்களில் அடைக்க வேண்டும் எனக் கூறி, இட்லரின் யூத அழித்தொழிப்பை நினைவுபடுத்துகிறார்.

ஜம்முவிலுள்ள வர்த்தக சங்கத்தின் தலைவர் ராகேஷ் குப்தா, முசுலீம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டிவிடும் நோக்கத்தோடு, ஜம்முவில் குடியேறியிருக்கும் வங்கதேச மற்றும் பர்மிய முசுலீம்களை அடையாளம் கண்டு, அவர்களைக் கொல்லுமாறு அறிவிக்கிறார்.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள மேவார் பல்கலைக் கழகத்தில் பயின்றுவரும் காஷ்மீர் மாணவர்களுள் ஆறு பேர் உள்ளூர் இந்து மதவெறிக் கும்பலால் தாக்கப்பட்டுள்ளனர். அம்மாணவர்களைத் தீவிரவாதிகள் எனப் பழிபோட்டு அவமானப்படுத்திய அக்கும்பல், படிப்பைக் கைவிட்டு காஷ்மீருக்கு ஓடிப்போய்விடுமாறு மிரட்டியிருக்கிறது.

உ.பி. மாநிலத்தின் மீரட் நகரில், உத்தரப் பிரதேச நவ நிர்மாண் சேனா என்ற இந்து மதவெறி அமைப்பு, ஏப்ரல் 30-க்குள் அந்நகரத்தில் படித்துவரும் காஷ்மீர் மாணவர்கள் அனைவரும் வெளியேறிவிட வேண்டும் என்று எச்சரித்தும், காஷ்மீரிகளைப் புறக்கணிக்குமாறு உள்ளூர் இந்துக்களைத் தூண்டிவிட்டும் பிரச்சாரத் தட்டிகளைக் கட்டி வைத்திருக்கிறது.

இந்திய இராணுவத்தின் கீழ்த்தரமான அடக்குமுறைகளுக்கு எதிராகவும், சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட ஜனநாயக, குடியுரிமைகளுக்காகவும் போராடி வரும் காஷ்மீர் முசுலீம்களைத் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், பாகிஸ்தான் கைக்கூலிகள், மத அடிப்படைவாதிகள் எனப் பலவாறாக அவதூறு செய்து கொச்சைப்படுத்துவதன் மூலம், இந்தியாவின் பிற மாநில மக்களிடம் அவர்கள் மீது வெறுப்புணர்வைத் திட்டமிட்டு வளர்த்து வருகிறது, இந்திய ஆளுங்கும்பல்.

காஷ்மீர் முசுலீம்களும் மாணவர்களும் இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ முடியாது, கல்வி பயில முடியாது என்றால், இந்திய அரசு காஷ்மீரைச் சொந்தம் கொண்டாடுவதற்கு, அதனை அடக்கி ஆளுவதற்கு என்ன தகுதியும் உரிமையும் இருக்கிறது? தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் காஷ்மீர் முசுலீம்களின் வாழ்வுரிமையைக் காலில் போட்டு மிதித்துவரும் இந்திய அரசுக்கும், அதனின் சட்டங்களுக்கும், இராணுவம் உள்ளிட்ட அதனின் நிறுவனங்களுக்கும் அவர்கள் ஏன் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும்?

தற்போது அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க.-பி.டி.பி. கூட்டணியைத் துரோகத்தின் மறுஉருவாகவே கருதி வெறுக்கிறார்கள், காஷ்மீரி முசுலீம்கள். ஒருபுறம் இராணுவ அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலமும், இன்னொருபுறம் - ஜம்மு காஷ்மீரில் பசுவதைச் சட்டத்தை அமல்படுத்துவது, காஷ்மீரி தேசியக் கொடியை ஒழித்துக் கட்டுவது, ஜம்முவைச் சேர்ந்த மேல்சாதி பார்ப்பன பண்டிட்டுகளுக்கும் முன்னாள் இராணுவச் சிப்பாய்களுக்கும் தனி காலனிகளை உருவாக்குவது ஆகிய திட்டங்களின் வழியாக ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இந்துமயமாக்குவதன் மூலமும் காஷ்மீரை இந்தியாவின் நிரந்தரக் காலனியாக வைத்துக் கொள்ள முடியும் என மனப்பால் குடிக்கிறது, மோடி கும்பல்.

ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இந்தத் திட்டங்கள், கடந்த சில ஆண்டுகள் ''அமைதியாக'' இருந்த காஷ்மீரை எழுச்சியின் எல்லைக்குத் தள்ளிச் சென்றுவிட்டது. ''தீவிரவாதிகளின்'' கோரிக்கையாக இருந்த விடுதலைக் கோரிக்கையை, பள்ளத்தாக்கு பகுதியைச் சேர்ந்த மக்களின் உடனடி அரசியல் கோரிக்கையாக மாற்றிவிட்டது. சிறீநகர் தொகுதி தேர்தல் புறக்கணிப்பும், இளைஞர்கள்-மாணவர்கள் நடத்திவரும் கல்லெறி போராட்டங்களும் இந்த மாற்றத்தின் சாட்சியங்களாக உள்ளன.

● செல்வம்

# பெஹ்லு கான் கொலை: இந்துத்துவப் பிணந்தின்னிகளுடன் நாம் சேர்ந்து வாழ இயலுமா?

**தலித் மக்களுக்கு எதிரான தீண்டாமைக் கொடுமைகள் போல, இசுலாமியர்களுக்கு எதிரான தாக்குதல்களும் கண்டும் காணாது கடந்து செல்லும் அன்றாட நிகழ்வுகளாக மாறி வருகின்றன.**

பசுவின் பெயரால் இன்னொரு கொலை நடந்திருக்கிறது. கறவை மாடு வாங்கிச் சென்ற பெஹ்லு கான் என்ற 55 வயது பால் வியாபாரி, ராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் இந்துத்துவ கிரிமினல்களால் அடித்தே கொல்லப்பட்டிருக்கிறார்.

அக்லக் கொலை, ஊனாவில் தலித் மக்கள் மீதான தாக்குதல் போன்ற ஒரு சில நிகழ்வுகள் தேசிய ஊடகங்களில் பேசப்படுகின்றன. அவ்வாறு பேசப்படாமல், கணக்கில் வராத தாக்குதல்களும் கொலைகளும் அதிகரித்து வருகின்றன. எப்படி அன்றாட நிகழ்வாக நிறுவனப் படுத்தப்பட்டிருக்கும் தலித் மக்களின் மீதான தீண்டாமைக் கொடுமைகளில் ஒரு சில மட்டும்தான் வெளியுலகுக்குத் தெரிய வருகின்றனவோ, அப்படி மாறி வருகின்றன இஸ்லாமிய மக்களின் மீதான தாக்குதல்கள்.

மாட்டைக் கொன்றார்கள் என்பதில் தொடங்கி "மாட்டைக் கொண்டு சென்றார்கள், மாட்டுக்கறி வைத்திருந்தார்கள், வைத்திருப்பதாக சந்தேகிக்கப் பட்டார்கள்" என்று கொலைகளுக்கும் தாக்குதல்களுக்குமான காரணங்கள் மென்மேலும் அற்பமானவையாக மாறி வருவதை சமீபத்தில் ராஜஸ்தானில் நடந்துள்ள சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

பெஹ்லு கான் அரியானா மாநிலம் ஜெய்சிங்பூரைச் சேர்ந்தவர். ராஜ்புத் சாதியிலிருந்து இஸ்லாமியர்களாக மாறிய மியோ முஸ்லீம்கள் என்ற பிரிவைச் சேர்ந்தவர். அந்த ஊரின் மியோ முஸ்லீம்களில் பெரும்பான்மையோர் நிலமற்ற விவசாயிகள். கான், அவ்வப்போது காய்கறி விற்பார். குத்தகை விவசாயமும் செய்வார். வயதான தாய், மனைவி, இரண்டு மகன்கள், திருமணமாகாத இரண்டு பெண்கள் உள்ளிட்ட குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு இப்படிப் பல தொழில்கள் செய்து அவர் ஈட்டும் வருமானம் மாதம் 8,000 முதல் 12,000 ரூபாய்.

ஏப்ரல் ஒன்றாம் தேதியன்று புதிதாகப் பசுமாடு வாங்க ஜெய்ப்பூர் கால்நடைச் சந்தைக்கு தன் இரண்டு மகன்களுடன் சென்றிருக்கிறார் கான். எருமை மாட்டைவிடப் பசுமாடு விலை குறைவு என்பதால், கன்றுகளுடன் இரண்டு பசுமாடுகளை வாங்கி வண்டியில் ஏற்றிக் கொண்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, டில்லி - ஜெய்ப்பூர் தேசிய நெடுஞ்சாலையில், ஆல்வார் என்ற இடத்துக்கு அருகே பஜ்ரங் தள் கும்பலைச் சேர்ந்த பத்து பேர் அவரை வழி மறித்திருக்கின்றனர். இதற்கிடையில் இந்த தாக்குதல் நடந்து கொண்டிருந்த போதே, அவருடன் சந்தைக்கு வந்த ஊர்க்காரரின் இன்னொரு வண்டியும் வந்திருக்கிறது. அதையும் தடுத்து நிறுத்தி விட்டனர்.

பெஹ்லு கானும் மற்றவர்களும் சந்தையில் நகராட்சி அதிகாரிகள் கொடுத்த

பஜ்ரங் தள் குண்டர்களால் கொலைவெறியோடு கொடூரமாகத் தாக்கப்படும் பால் வியாபாரி பெஹ்லு கான்.





ரசீதைக் காட்டியவுடன் அதை வாங்கி கிழித்தெறிந்தி ருக்கின்றனர். வண்டியின் ஓட்டுனர் தன்னுடைய சாதி யைச் சொல்லி, தான் ஒரு இந்து என்று நிரூபித்ததால், அவரை ஒரு அறைவிட்டுத் துரத்தி விட்டனர்.

பிறகு பெஹ்லு கானையும் அவரது இரு மகன் களையும் ஹாக்கி மட்டைகளால் தாக்கியிருக்கின்றனர். பிறகு, ''பாவம்பா, பாத்தா சாதுவா தெரியுது. விட்டு விடுவோம். சரி ஓடிப் போயிடுங்கடா'' என்று கருணை காட்டுவது போல நடித்திருக்கின்றனர். ஓடத் தொடங் கியவுடன் நாயை அடிப்பது போல விரட்டி விரட்டி அடித்திருக்கின்றனர். வேடிக்கை பார்க்க சேர்ந்த கூட் டமும் சேர்ந்து அடிக்கத் தொடங்கியிருக்கிறது. இறுதி யில் அவர்களை உயிரோடு கொளுத்துவதற்காக அவர் கள் மீது பெட்ரோலைத் தெளித்திருக்கின்றனர். நடந்த இடம் டில்லி -ஜெய்ப்பூர் தேசிய நெடுஞ்சாலை என்ப தால் ரோந்து போலீசு வந்து விட்டது. ஆனால், தாக்கிய வர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.

சுமார் ஒன்றேகால் லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஐந்து மாடுகள் ஐந்து கன்றுகளையும், பெஹ்லு கானின் கையிலிருந்த 75,000 ரூபாயையும் பஜ்ரங் தள் கும்பல் பிடுங்கிக் கொண்டுவிட்டது. மாடுகள் கோசாலைக்குப் போய்விட்டதாகச் சொல்கின்றனர். இரண்டு வண்டி களும் போலீசால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன.

அடிபட்டவர்களை மருத்துவமனையில் பார்ப்ப தற்கே அவர்களது குடும்பத்தினரிடம் 5,000 ரூபாயைக் கறந்திருக்கிறது போலீசு. அது மட்டுமல்ல, மருத்து வமனையில் இருப்பவர்களை வீட்டுக்கு அழைத்துப் போக வேண்டுமானால், ஒரு லட்சம் ரூபாய் தரவேண் டும் என்று பேரம் பேசியிருக்கிறான் போலீசு இன்ஸ் பெக்டர்.

அந்த பரிதாபத்துக்குரிய ஏழைகள், அரும்பாடு பட்டு 75,000 ரூபாய் பணத்தைப் புரட்டி எடுத்துக் கொண்டு வந்து, பெஹ்லு கானைக் கண்ணில் காட்டு மாறு கெஞ்சியிருக்கின்றனர். ஆனால், ஏப்ரல் 4-ஆம் தேதியன்று அவர் இறந்து விட்டார். ஹாக்கி மட்டை யால் அடித்த அடியில், மார் பெலும்பு நொறுங்கி, நுரை யீரல், இதயம் உள்ளிட்ட உள் உறுப்புகளில் இரத்தம் உறைந்து, அவர் இறந்து விட்டார்.

மரண வாக்குமூலத்தில் தன்னைத் தாக்கியவர்கள் விசுவ இந்து பரிசத், பஜ் ரங் தள் அமைப்பைச் சேர்ந் தவர்கள் என்றும் பெஹ்லு கான் கூறியிருக்கிறார். அதே போல காயம்பட்ட மற்றவர் களும் வாக்குமூலம் அளித் திருக்கின்றனர். ஆனால், அவர்கள் கைது செய்யப்பட வில்லை. மாறாக, பெஹ்லு கான் மற்றும் அவரது மகன் கள் உள்ளிட்ட 16 பேர் மீது பசுவதை தடை சட்டத் தின் கீழ் (*Rajasthan Bovine Animals (Prohibition of Slaughter and Regulation of Temporary Migration or Export) Act, 1995*) போலீசார் வழக்கு பதிவு செய்திருக் கின்றனர். கான் இறந்து விட்டதால், வேறு வழியின்றி இந்துத்துவ காலிகள் 6 பேர் மீது கொலை வழக்கும் பதிவு செய்திருக்கிறார்கள்.

மேற்கூறிய சட்டத்தின்படி பெஹ்லு கானும் மற் றவர்களும் செய்திருக்கும் குற்றம் என்ன? ஜெய்ப்பூர் கால்நடைச் சந்தையில் மாடுகளை வாங்கினார் என் பதற்கான ரசீது அவரிடம் இருந்தது. மாடுகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சட்டவிரோ தமாக கொண்டு சென்றதாக போலீசு வழக்கு போட் டிருக்கிறது. அவ்வாறு கொண்டுசெல்ல வேண்டுமா னால், மாவட்ட ஆட்சியரிடம் அனுமதிச் சீட்டு பெற் றிருக்க வேண்டும் என்று கூறுகிறது அந்த சட்டம். அப்



**பஜ்ரங் தள் குண்டர்களின் தாக்குதலுக்கு ஆளாகி உயிர் பிழைத்த பெஹ்லு கானின் மகன் ஆரிஃப்.**

**இராஜஸ்தான் மாநிலம்-ஜெய்ப்பூர் நகரில் அமைந்துள்ள ஹிங்கோனியா கோசாலையில் உணவின்றி இறந்துபோன மாடு அப்புறப்படுத்தப்படுகிறது.** (கோப்புப் படம்)





பசு பாதுகாப்பு என்ற பெயரில் இந்து மதவெறிக் கும்பல் ஊனாவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரைத் தாக்கியதைக் கண்டித்து ஊனாவில் தாழ்த்தப்பட்ட அமைப்புகள் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

படி ஒரு அனுமதிச்சீட்டு பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை என்று ஜெய்ப்பூர் ஆர்.டி.ஓ. பல்தேவ்ராம் போஜக் கூறியதாகப் பத்திரிகையாளர்கள் அம்பலப் படுத்தியிருக்கின்றனர். *(Anand kochukudy, thewire.in, 14.4.2017)*

இல்லாத ஒரு அனுமதிச் சீட்டை வாங்காத குற்றத் துக்காக அந்த இஸ்லாமியர்கள் மீது வழக்கு போடு கிறது போலீசு. எந்த சீட்டைக் காட்டினாலும், அதை வாங்கி கிழித்துப் போட்டுவிட்டு தாக்குதல் தொடுக் கின்றனர் இந்துத்துவ காலிகள். அப்படியானால் இந்த சட்டத்தின் நோக்கம் என்ன?

இந்த சட்டத்தின் நோக்கம் பசுக்களைப் பாதுகாப்ப தல்ல, இஸ்லாமியர்களையும் தலித் மக்களையும் அச் சுறுத்தி ஒடுக்குவதுதான். ‘‘பசுக்களை எங்கள் குழந் தைகளைப் போலப் பார்ப்பவர்கள் நாங்கள். மாட்டின் வாலைக்கூடக் கழுவத் தெரியாத ஆட்கள் எங்களுக்கு பசுப் பாதுகாப்பு பற்றி சொல்லிக்கொடுக்கிறார்களா? பிடுங்கிக் கொண்டு போன எங்கள் பசுக்களையும் கன் றுகளையும் இவர்களுடைய கோசாலையில் பட்டினி போட்டே கொன்றுவிடுவார்கள். அதை நினைத்தால் தான் வேதனையாக இருக்கிறது’’ என்று குமுறுகிறார் கள் பெஹ்லு கானின் குடும்பத்தினர்.

அவர்கள் கூறுவது மிகையல்ல. நாட்டி லேயே மிகச்சிறந்த கோசாலை என்று பீற் றிக் கொள்ளப்படும் ஜெய்ப்பூரில் உள்ள ஹிங்கோனியா கோசா லையில் மாதந்தோ றும் சுமார் 1050 மாடு கள் சாகின்றன. அவற் றில் ஆகப் பெரும்பான் மையானவை இயற் கையான மரணங்கள் அல்ல. தீவனமின்றி, சேற்றிலும் சாணத்திலும் சிக்கி நோய்வாய்ப்பட்டு மெல்ல அழுகித் துடித் துச் சாகின்ற பரிதாபத் துக்குரிய மரணங்கள். கோமாதா பெயரில் வசூ லிக்கப்படும் பணத்தை கோமாதாவின் காவலர்கள் தின் றுவிடுவதால் நடக்கும் மரணங்கள்.

ஆகஸ்டு 2016-இல் இந்த மரணங்கள் குறித்து விசா ரணை நடத்திய ஜெய்ப்பூர் உயர் நீதிமன்றம், ‘‘அது கோசாலையல்ல, கசாப்புக்கடை’’ என்று சாடியது. பத்தி ரப் பதிவுக்கான ஸ்டாம்ப் கட்டணத்தில் 10% ‘கோமாதா வரி’யாக (சர்சார்ஜ்) மக்களிடம் வசூலிக்கிறது ராஜஸ் தான் அரசு என்பதை இங்கே நினைவிற் கொள்ள வேண்டும்.

குஜராத் அரசோ, பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் ஆல்வாரில் நடந்த ரவுடித்தனத்தையே சட்டமாக்கி விட்டது. காங்கிரசு உள்ளிட்ட எதிர்க்கட்சியினரை யெல்லாம் அவையிலிருந்து வெளியேற்றி விட்டு, பார்வையாளர் மாடம் முழுவதும் சாமியார்களை உட் கார வைத்துக் கொண்டு, பசுவைக் கொலை செய்ப வர்களுக்கு ஆயுள் தண்டனை என்ற சட்டத்தை நிறை வேற்றியிருக்கிறது.

இத்தகைய சட்டங்கள் எப்படிப் பயன்படுத்தப் படும் என்பதை பெஹ்லு கானின் கொலை காட்டு கிறது. செத்த மாட்டின் தோலை உரித்ததற்காக துலினா வில் 5 தலித்துக்களை அடித்தே கொன்றார்கள். ஊனா வில் தலித்துகளுக்கு கசையடி. வீட்டில் மாட்டுக்கறி



விசுவ ஹிந்து பரிஷத்தின் மதிப்பீட்டின்படியே, மஹாராஷ்டிராவில் மட்டும் சுமார் 7,50,000 பசுக்களும் எருதுகளும் கேட்பாரற்று, கவனிப்பாரற்று, வீதியில் அலைகின்றன. இக்கால்நடைகள் அனைத்தும் விவசாயிகளால், விற்பனை செய்ய முடியாமலும், உபயோகப்படுத்த முடியாமலும் வீதியில் விடப்பட்டவையே.

வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி அக்லக்கைக் கொன்றார்கள். பையில் மாட்டுக்கறி எடுத்துச் சென்றதாகக் கூறி போபால் ரயில் நிலையத்தில் வைத்தே இஸ்லாமியப் பெண்களை அடித்துத் துவைத்தார்கள். ஆட்டுக் கறி கடைகளை மாட்டுக்கறி கடைகள் என்று வதந்தி பரப்பி, உ.பி.யில் கறிக்கடைகளை மூடினார்கள்.

இப்போது பால் வியாபாரம் செய்த குற்றத்துக்காக பெஹ்லு கானைக் கொலை செய்திருக்கிறார்கள்.இறைச்சிக்கடைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட்சக்கணக்கான குரேஷி பிரிவு இஸ்லாமியர்களை அந்தத் தொழிலிலிருந்து விரட்டுவதற்கு பா.ஜ.க.வினர் பசுவதை தடைச் சட்டத்தைப் பயன்படுத்தினர். இப்போது பால் வியாபாரம் செய்யும் மியோ முஸ்லிம்களையும் குறி வைத்திருக்கின்றனர்.

கண் தெரியாத தாய், தன் கணவன் கொலை செய்யப்படும் காட்சியைக் கண்டும் ஏதும் செய்ய இயலாமல் ஆற்றாமையால் துடிக்கும் மனைவி, நிர்க்கதியாக நிற்கும் இளம் மகள்கள், எலும்புகள் நொறுக்கப்பட்ட மகன்கள், தீவனத்துக்கு வழியின்றி கோசாலையில் வாடும் பெஹ்லு கானின் மாடுகள், கன்றுகள்!

“தென்னிந்திய கருப்பர்களுடன் நாங்கள் சேர்ந்து வாழவில்லையா?” என்று தருண் விஜய் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கும். இந்தக் காவி காட்டுமிராண்டிகளுடன் மனிதர்களாகிய நாம் சேர்ந்து வாழ இயலுமா?

● அஜித்

# கோமாதாக்களின் குலத்தையே அழிக்கும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் !

விவசாயிகள் பால் கறப்பதை நிறுத்திவிட்ட பசுக்களையும், எருதுகளையும் அடிமாட்டிற்கு விற்றுவிட்டு, அதன் மூலம் வரும் பணத்தைக் கொண்டு மீண்டும் பசுக்களை வாங்கி வளர்க்கும்போது மட்டும்தான் இத்தொழிலில் சிறிதாவது வருமானம் பெற முடியும். ஆனால், தற்போதைய கடும் சட்டங்களின் காரணமாக பால் உற்பத்திக்கு பசுக்களை வாங்குவதை விட, எருமைகளை வாங்கினால் பால் கறப்பதை நிறுத்திய பிறகும் அவற்றை அடிமாட்டிற்கு விற்க முடியும் என்பதால், பசுக்களைத் தவிர்த்து எருமைகளை வாங்க ஆரம்பித்திருக்கின்றனர் விவசாயிகள்.

2012-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கால்நடை கணக்கெடுப்பின்படி பசுவதைத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டு அமல்படுத்தப்பட்டிருக்கும் முக்கியமான மாநிலங்களில் பால் உற்பத்தியில் எருமை மாடுகளின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. ஹரியானா(77%), பஞ்சாப்(67%), உத்திரப்பிரதேசம்(61%), குஜராத்(51%), ராஜஸ்தான்(50%). விவசாயிகள் பசுமாடு வாங்குவதை தவிர்க்கத் தொடங்கிவிட்டனர் என்பதையே இது காட்டுகிறது.

ஆனால், பசுவதைத் தடைச் சட்டம் நடைமுறையில் இல்லாத மாநிலங்களில்தான் பால் உற்பத்தியில் பசுக்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. கேரளா(93%), மேற்கு வங்கம்(96.5%) மற்றும் அஸ்ஸாம்(91%) ஆகிய மாநிலங்களில் பால் உற்பத்தியில் பசுக்களின் பங்களிப்பு 90% க்கு மேல் இருக்கின்றது. அவாளுடைய வார்த்தைகளில் சொல்லுவதானால், விவசாயிகளிடமிருந்து “லெட்சுமி”யைப் பிடுங்கிவிட்டு அவர்களது கைகளில் “எமனை”க் கொடுத்திருக்கிறது.



இது போக, பசுவதைத் தடைச் சட்டம் நடைமுறையில் உள்ள மாநிலங்களில் பல்வேறு நாட்டு மாடு இனங்கள் அழிந்து வருகின்றன. உதாரணமாக, கடந்த 2006-ஆம் ஆண்டு ஹரியானா மாநிலத்தில் தேசிய விலங்கு மரபணு வள ஆணையம் எடுத்த கள ஆய்வின்படி, ’’ஹரியானா பசு’’ என்னும் தனி இனத்தின் எண்ணிக்கை தொடர்ச்சியாகச் சரிவடைந்து வந்துள்ளதும் தெரிய வந்துள்ளது, இச்சரிவிற்குக் காரணம், இப்பசுக்கள் பால் கறப்பதை நிறுத்திய பின்னர் இவற்றால் பலனில்லை என்பதால், விவசாயிகள் இப்பசுக்களை வளர்ப்பதற்கே விரும்புவதில்லை என்பதேயாகும்.

விசுவ ஹிந்து பரிஷத்தின் மதிப்பீட்டின்படியே, மஹாராஷ்டிராவில் மட்டும் சுமார் 7,50,000 பசுக்களும் எருதுகளும் கேட்பாரற்று, கவனிப்பாரற்று, வீதியில் அலைகின்றன. இக்கால்நடைகள் அனைத்தும் விவசாயிகளால், விற்பனை செய்ய முடியாமலும், உபயோகப்படுத்த முடியாமலும் வீதியில் விடப்பட்டவையே.

இப்படி வீதியில் அலையும் மாடுகள் தீவனமின்றிப் பசிக்கு பாலிதீன் பைகளைத் தின்று, வயிறு உப்பி வலியால் துடித்துச் சாகின்றன. அல்லது சங்கப் பரிவாரத்தினர் நடத்தும் கோசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கே வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, சாணத்திலும் சகதியிலும் உழன்று, தீவனமின்றிப் பட்டினியில் துடித்து, நோய்வாய்ப்பட்டு, சித்திரவதைப்பட்டு சாகின்றன.

பசுவதை தடைச் சட்டம் அமலில் உள்ள மாநிலங்களில் மாடு வளர்ப்போர், பயன்படாத மாடுகளை வீதியில் விடுகின்றனர். சிலர் நட்டப்பட முடியாமல், ஏதோ ஒரு வழியில் வந்த விலைக்கு அடிமாட்டுக்கு விற்று விடுகின்றனர். இதையும் தடுப்பதற்காக 148 கோடி ரூபாய் செலவில் நாடு முழுவதும் உள்ள மாடுகளின் காதில் ஆதார் அட்டையைத் தைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார் மோடி.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக அமல்படுத்தப்படுமானால், எதிர்காலத்தில் கோமாதா வழிபாடு நடத்த விரும்பும் ஹிந்துக்கள், பாகிஸ்தானில்தான் பசுவைத் தரிசிக்க இயலும்.

(வினவு தளத்தில் வெளிவந்த கட்டுரையின் திருத்தி சுருக்கப்பட்ட வடிவம்)

# ஆதார் - மீப்பெரும் மின்தரவுக் கிடங்கு:

# மக்களை ஒடுக்கும் டிஜிட்டல் ஆயுதம்!

**ஆதார் அட்டையைக் குடிமக்களின் மீது திணிப்பது ஜனநாயக விரோதமானது என்பது மட்டுமல்ல, அத்திணிப்பின் நோக்கமே ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டுவதுதான்.**

“உங்களுடைய வீட்டுப் பணியாளர்கள், கார் ஓட்டுநர், எலக்ட்ரீசியன், வீட்டு வாடகைக்காரர்கள், யாராயிருந்தாலும் ஆதாரை அடிப்படையாகக் கொண்ட எங்களுடைய ஆண்டிராய்ட் ஆப் மூலம் அவர்களது பின்னணியை பரிசோதித்துக் கொள்ளலாம்’’ என்கிறது ட்ரஸ்ட் ஐடி (*TrustID*) என்ற கம்பெனியின் விளம்பரம். “முகத்தைப் பார்த்து நம்பாதீர்கள், ட்ரஸ்ட் ஐடியைப் பாருங்கள்’’ என்கிறது அக்கம்பெனி.

அதாவது ஆதார் அட்டை வாங்கியிருக்கும் கோடிக்கணக்கான குடிமக்கள் அரசிடம் கொடுத்த தங்களைப் பற்றிய தகவல்கள் முதல், அவர்களது கைரேகை, கருவிழி ரேகை உள்ளிட்ட அனைத்தும் இந்தத் தனியார் நிறுவனத்தின் வசம் உள்ளன. எந்த ஒரு நபரைப் பற்றிய விவரத்தையும் இந்த நிறுவனத்துக்குப் பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம் என்பதே மேற்படி விளம்பரத்தின் பொருள்.

அரசின் நலத்திட்டங்கள் சிந்தாமல் சிதறாமல் (இடைத்தரகர்களுக்குச் செல்லாமல்) நேரடியாக மக்களிடம் சென்று சேர்வதை உத்திரவாதப்படுத்திக் கொள்ள ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் வழங்கப்படவுள்ள ஒரு பிரத்யேக அடையாள எண்ணாகத்தான் முதலில் ஆதாரைச் சொன்னது அரசு. ஆனால், ஆதாரின் மூளையான நந்தன் நிலேகானி ஆரம்பத்திலிருந்தே பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான வியாக்கியானங்களைச் சொல்லி வந்திருக்கிறார்.

“ஆதார் என்பது வெறும் அடையாளம் மட்டுமல்ல அது “அடையாள செயற்தளம்’’ (*Identity Platform*)’’ என்று 2011-ஆம் ஆண்டு பெங்களூருவில் மென்பொருள் பொறியாளர் கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். இதன் பொருள், ஆதாரை ஒட்டுமொத்த மக்களுடைய அடையாளங்களின் மீப்பெரும் மின்தரவுக் கிடங்காக அரசு உருவாக்கியுள்ளது.

குடும்ப அட்டைகளோடு ஆதார் விவரங்களை இணைக்க வரிசையில் காத்திருக்கும் பொதுமக்கள்.



மீப்பெரும் மின்தரவுக் கிடங்கு என்பதைக் கொண்டு என்ன செய்ய முடியும்?

ஆதார் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது; செல்போன் இணைப்பு பெற ஆதார் எண் அவசியம்; ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு நபருக்கு நபர் பணப்பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். இந்தப் போக்குகள் மெல்ல மெல்ல இந்தியர்களுடைய வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாக ஆதாரை மாற்றி வருகின்றன.

ஒரு தனி நபரின் கடன் எவ்வளவு, யாருக்குப் பணம் கொடுக்கிறார், யாரிடம் வாங்குகிறார், சம்பளம் எவ்வளவு, அந்தச் சம்பளத்தில் வீட்டுக்குச் செலவு செய்வது எவ்வளவு, சேமிப்பது எவ்வளவு என்பவை உள்ளிட்டு அந்தத் தனி நபரின் பொருளாதாரச் செயல்பாடுகளில் தொடங்கி, அவர் ஓய்வு நேரத்தில் எந்த மாதிரியான திரைப்படங்கள் பார்க்கிறார், செல்பேசியில் எத்தனை நேரம், எதற்காகச் செலவிடுகிறார் என்பன போன்ற அவரது சமூக செயல்பாடுகள் வரை கண்காணிக்க முடியும்.

நூற்றி முப்பது கோடி மக்களின் தனிப்பட்ட தகவல்கள் மின்தரவுகளாகச் சேமிக்கப்படுவது அரசுக்கும் முதலாளிகளுக்கும் எண்ணற்ற வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது.

உதாரணமாக, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து இணையத்தின் மூலம் கட்டணம் செலுத்தி நீங்கள் வாங்கிப் படிக்கும் நூல்கள், பார்க்கும் படங்கள் உள்ளிட்டவைகளைக் கொண்டு உங்களது ஆர்வம், ஆளுமை, பண்புகள் எவ்வாறிருக்கும் என்பதைக் கணிக்கும் கணினி செயலிகளை உருவாக்க முடியும். இதுபோன்ற செயலிகள் கொடுக்கும் தகவல்களின்

அடிப்படையில் ஒரு முதலாளி தன்னிடம் வேலைக் குச் சேர முன்வரும் ஒருவரை வேலைக்குச் சேர்க்க லாமா அல்லது பணிநீக்கம் செய்யலாமா என்பதை முடிவு செய்ய முடியும். மேலே குறிப்பிடப்பட்டிருக் கும் விளம்பரத்தின் பொருளும் இதுதான்.

அரசைப் பொருத்தவரை மக்களைச் சதாசர்வகா லமும் கண்காணிக்க முடியும். மேலும், மீப்பெரும் மின்தரவுகளை செயற்கை அறிதிறனுடன் (*Artificial Intelligence*) இணைக்கும் தொழிநுட்ப சாத்தியமும் உள்ளது. அவ்வாறு செய்யப்படும்போது, ஒரு குறிப் பிட்ட தருணத்தில், ஒரு குறிப்பிட்ட நபர் என்ன மாதிரி யான முடிவுகளை எடுக்கும் சாத்தியங்கள் உள்ளன என் பதை (ஆதார் மூலம் இணைக்கப்பட்டு, மீப்பெரும் மின்தரவுக் கிடங்கில் சேமிக்கப்பட்டிருக்கும்) விவரங் களைக் கொண்டு கணிக்க முடியும். இவ்வாறு கணிக் கும்போது வந்தடையும் முடிவுகள் எந்தளவுக்குத் துல் லியமாக இருக்கும் என்பதும், இவ்வாறு மனிதர்கள் குறித்த தீர்மானங்களைக் கணினிகள் எடுப்பது சரி தானா என்பதும் அறிவியல் உலகில் இன்னமும் விவா திக்கப்பட்டு வருகின்றன.

இன்றைக்கே மக்களின் வாசிப்பு, ரசனை, அரசியல் கண்ணோட்டம், பண்பாட்டு விழுமியங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஆளும் வர்க்கப் பண்பாட்டு நிறுவனங் கள் திட்டமிட்டே உருவாக்குகின்றன. இந்நிலையில் அறிவியல் வழங்கும் இந்த சாத்தியங்களை பாசிசமய மாகிவரும் அரசு எப்படிக் கேடாகப் பயன்படுத்தும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்ற வாளிகளை போலீசார் கண்காணிப்பதைப் போல, 130 கோடி மக்களையும் தனது கண்காணிப்பின்கீழ் கொண்டு வருகிறது மோடி அரசு. குடிமக்கள் அனை வரும், நாங்களெல்லாம் குற்றவாளிகளா என்று கோப மாகக் கேள்வி எழுப்புவதற்குப் பதிலாக, ''நான் என்ன தீவிரவாதத்திலா ஈடுபட்டிருக்கிறேன்? கண்காணிக்கட் டுமே, நான் எதற்குப் பயப்படவேண்டும்?'' என்பது போன்ற பாமரத்தனமான வாதங்களும் சமூக ஊடகங் களில் முன்வைக்கப்படுகின்றன.

குடிமக்களின் செயல்பாடுகள் அனைத் தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதுதான் கண்காணிப்பு நடவடிக்கையின் நோக்கம். இந்த நடவடிக்கை ஜனநாயக விரோ தமானது என்பது மட்டுமல்ல, இதன் நோக் கமே ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டுவதுதான்.

கடந்த 2016-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மத்திய அரசு தேசிய புலனாய்வுச் சட்டகத் தைப் (நேட்கிரிட் : *NATGRID National Intellingence Grid*) புனரமைத்துள்ளது. வங் கிப் பரிவர்த்தனைகள், கடன் அட்டைகள், குடியேற்றத் துறை, இரயில்வே பயண விவ ரங்கள், விமான பயண விவரங்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களின் காவல்துறை, மாநி லப் புலனாய்வு அமைப்புகள் மற்றும் மத் திய புலனாய்வு அமைப்புகள் உள்ளிட்டு 21

**130 கோடி மக்களையும் தனது கண்காணிப்பின் கீழ் கொண்டு வருகிறது மோடி அரசு. குடிமக்கள் அனைவரும், நாங்களெல்லாம் குற்றவாளிகளா என்று கோபமாகக் கேள்வி எழுப்புவதற்குப் பதிலாக, ''நான் என்ன தீவிரவாதித்திலா ஈடுபட்டிருக்கிறேன்? கண்காணிக்கட்டுமே'' எனப் பாமரத்தனமாக வாதிடுகிறார்கள்.**

துறைகளின் மின்தரவுகளை ஒருங்கிணைக்கும் மைய மாக நேட்கிரிட்டின் செயல்பாட்டை விரிவுபடுத்தியுள் ளது மோடி அரசு.

நேட்கிரிட்டுடன் ஆதார் விவரங்களையும் ஆதார் எண்ணால் இணைக்கப்பட்ட பல்வேறு பொருளா தார பரிவர்த்தனை, செல்பேசி உரையாடல் விவரங் கள் மற்றும் இன்னபிற விவரங்களையும் இணைப்பது தொழில்நுட்ப ரீதியில் எளிதானது. அப்படி இணைக் கப்பட்டிருப்பதான செய்திகள் இதுவரை வெளியாக வில்லை. எனினும், ஏற்கெனவே அப்படியான ஒரு இணைப்பு செய்யப்பட்டிருந்தாலும் வியப்பதற்கு ஏது மில்லை.

உளவுத்துறையினர் திரட்டும் உளவுத் தகவல் களையே (*Human Intelligence*) முந்தைய காலங் களில் அரசுகள் சார்ந்திருந்தன. இதனிடத்தில் பல் வேறு தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட மின் தரவுகளைச் சேமிக்கும் மீப்பெரும் மின்தரவுக் கிடங் குகளை (*Big Data Lakes*) உருவாக்குவது, அதின் விவ ரங்களைச் செயற்கை அறிதிறன் பெற்ற கணினிகளின் மூலம் சலித்தெடுத்து முன்னறிப் புலனாய்வு முறையை

ம.பி. மாநில ஜபல்பூர் நகர மருத்துவமனையில் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு ஆதார் புகைப்படம் எடுக்கப்படும் அத்துமீறல்.





குஜராத் மாநிலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போலி ஆதார் கார்டுகளைத் தயாரித்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டவர்கள்.

(predictive intelligence) புகுத்தும் முனைப்புடன் அரசு செயல்பட்டு வருகின்றது.

● ❍ ●

இந்தத் தொழில்நுட்ப சாத்தியங்களை அமெரிக்கா எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தியது என்பதையும், அதனால் தனிநபர் சுதந்திரம் எந்தளவுக்கு பாதிக்கப் பட்டது என்பதையும் ஸ்நோடன் அம்பலப்படுத்தி னார். இங்கோ மத்திய அரசின் அட்டர்னி ஜெனரலே உச்ச நீதிமன்றத்தில் தனிநபர் சுதந்திரம் என்பது அரசி யல் சாசனத்தால் உத்திரவாதப்படுத்தப்பட்டதல்ல என வாதிடுகிறார்.

''போதை மருந்து கும்பல்களுக்கும் தீவிரவாதச் செயல்களுக்கும் நிதிமூலமாக கருப்புப்பணம் இருந்து வருகின்றது. எனவே, ஒரு நபரின் அடையாளத்தைப் போலி நகல் செய்ய முடியாத அளவுக்கு உறுதியான வழிமுறைகளை அமல்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது'' என்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார் மத்திய அரசு வழக்குரைஞர் முகுல் ரோத்தகி.

அதாவது, பயன்பாட்டில் உள்ள பான் அட்டை களில் நிறைய போலிகள் இருப்பதாகவும், போலி பான் எண்களின் மூலம் நடக்கும் வருமான வரி தாக் கலில் ஏராளமான தில்லுமுல்லுகள் நடப்பதாகவும், இதுவும் கருப்புப் பணத்திற்கு ஒரு முக்கிய காரணம் என்பதும் அரசின் வாதம்.

மேலும் தனது வாதத்தை முன்வைத்த மத்திய அரசு வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, இதுவரை சுமார் 113.7 கோடி ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக வும், இதுநாள் வரை வழங்கப்பட்ட ஆதார் அட்டை களில் போலிகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், உயிரியளவு விவரங்கள் (Biometric informa tion), கருவிழிப் பதிவு மற்றும் கைரேகை விவரங்க ளின் அடிப்படையில் ஆதார் அட்டைகள் வழங்கப் படுவதால், போலி அட்டைகளுக்கு வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார். நெஞ்சறிந்து பொய் சொல் வது என்பதற்கு மத்திய அரசு வழக்கறிஞரின் மேற்படி வாதத்தை உதாரணமாகக் காட்டலாம்.

முகுல் ரோத்தகி உச்ச நீதி மன்றத்தில் புளுகியதற்குச் சரியாக ஏழு நாட்கள் முன் பாக (ஏப்ரல் 26) குஜராத் மாநிலம் அகமதாபாத் நக ரைச் சேர்ந்த நிலேஷ் மிஸ்த்ரி என்பவர் கைது செய்யப்பட் டார். நிலேஷ் ஏன் கைது செய்யப்படுகிறார்? அதற்கும் முகுல் ரோத்தகி உச்ச நீதிமன் றத்தில் வைத்த வாதத்திற்கும் என்ன தொடர்பு?

அலோபதி மருந்துகள் விற்பனைக்கு அனுமதிக்கப் படுவதற்கு முன் தன்னார்வ லர்களாக முன்வரும் மனி தர்களின் மேல் பரிசோதிக்கப்படும் (Clinical Trials). மேற்படி சோதனைகளுக்கு முன்வரும் ஒருவர், அதற்கு முன் குறைந்தது மூன்று மாதங்கள் வேறு கிளினிக் கல் டிரையலுக்கு சென்றிருக்கக் கூடாது என்பது விதி முறை. நிலேஷ் மிஸ்த்ரி வேலையிழந்த மென்பொருள் பொறியாளர். அவருக்குப் பண நெருக்கடி இருந்ததால், இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறிக் குறுகிய காலத் தில் மீண்டும் சோதனைக்குச் செல்ல வேண்டுமென்ப தற்காக புதுப்புது அடையாளங்களுடன் போலி ஆதார் அட்டைகளை உருவாக்கியுள்ளார். தனக்கு மட்டு மின்றி, தன்னிடம் அறிமுகமான வேறு 100 பேர்களுக் கும் போலி ஆதார் அட்டைகளை உருவாக்கிக் கொடுத் துள்ளார்.

போலி ஆதார் அட்டைகள் உருவாக்க முடியாது என்பது பொய். சட்டப்பூர்வமான முறைகளிலேயே போலி பான் அட்டைகள் பெற முடியும் என்றால், ஆதாரைப் பொருத்தவரை சட்டப்பூர்வமற்ற முறையில் போலிகளைச் செய்ய முடியும். மேலும், ஆதார் விவ ரங்கள் அனைத்துமே மையப்படுத்தப்பட்ட கணினி களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அது ஹேக்கர்களின் தாக்குதலுக்கு இலக்காகும் வாய்ப்பும் உள்ளது. உலகிலேயே அதிசக்தி வாய்ந்த பாதுகாப்பு வளையங்கள் கொண்ட கணினிகளுக்குள்ளேயே ஹேக்கர்கள் நுழைந்து விவரங்களைத் திருடுகின்றனர் எனும்போது, ஆதார் விவரங்கள் திருட முடியாதவை எனக் கூறுவது நகைக்கத்தக்கது.

● ❍ ●

ஆதார் அட்டையைக் கட்டாயமாக்கக் கூடாது என்று கூறிக்கொண்டே, நடைமுறையில் அதனைக் கட் டாயமாக்கும் மோடி அரசின் நடவடிக்கைகளை மவுன மாக அங்கீகரித்து வருகிறது உச்ச நீதிமன்றம்.

கல்வி உதவித் தொகை, ரயில்வே தேர்வாணை யத் துறை, மத்திய சிறு மற்றும் குறுந்தொழில்கள்

துறை உள்ளிட்டு மாநில வேலை வாய்ப்பு அலுவல கங்கள், மாநில கல்வித் துறை கள், மதிய உணவுத் திட்டம், அனைவருக்கும் கல்வித் திட் டம், தொழிலாளர் ஓய்வூதி யத் துறை, பொது விநியோகத் துறை - என மத்திய, மாநில அரசின் வசமுள்ள எண்ணற்ற திட்டங்களுக்கு ஆதார் அட் டையைக் கட்டாயமாக்கி உத் தரவிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது அரசு. பால்வாடிக் குச் செல்லும் குழந்தைகள் உள் ளிட்டு பள்ளிக் குழந்தைகள் அனைவரின் மேலும் ஆதார் அட்டையைக் கட்டாயமாக்கித் திணித்துள்ளது அரசு.

ஊரறிந்த இந்த உண்மை உச்ச நீதிமன்றத்துக்கு மட்டும் தெரியவில்லை. யாரேனும் வழக்கு தொடுக்கும்போது, கட்டாயமாக்கக் கூடாது என்று கண்டிப்புடன் கூறுவதுபோல உச்ச நீதிமன்றம் கூற, சரிங்கய்யா என்று அதற்கு கட்டுப்படுவது போல பாவலா காட்டுகிறது மோடி அரசு. மதிய உணவுக்கு ஆதார் வேண்டும் என்ற உத்தரவுக்கு எதிர்ப்பு வந்தவு டன் பின்வாங்கிய அரசு, இப்போது பான் அட்டைக்கு ஆதார் வேண்டும் என்று இன்னொரு சந்தின் வழியாக உள்ளே வருகிறது.

பான் அட்டைகள் பெறுவதற்கு ஆதார் அட்டையை கட்டாயமாக்குவது என்பது பான் அட்டை பெற விரும்புகிறவர்களோடு மட்டும் தொடர்புள்ள விசயம் அல்ல. ஆதார் அட்டை என்பது கட்டாயமல்ல என் பதை உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதாகவே பலரும் புரிந்து கொண்டிருக்கின்ற னர். மத்திய அரசு இயற்றிய ஆதார் சட்டமும்கூட விரும் பினால் பெற்றுக்கொள்ளும் அட்டையாகவே ஆதார் அட்டையை கூறுகிறது. இந் தச் சட்டத்தை மீறும் வகை யில் இதனை நடைமுறை யில் கட்டாயமாகத் திணிக் கும் முயற்சிகளில் மத்திய அரசு ஈடுபடுவதை எதிர்த் துத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கிறது. அந்த முதன்மை வழக்கு முடிவுக்கு வராத பொழுதே, கொல்லைப்புறமாக ஒரு முயற்சி மேற்கொண்டு சட் டப்படியே ஆதாரைக் கட்டா யமாக்கி விடுவதற்கு மோடி அரசு முயற்சிக்கிறது. அந்த முயற்சிதான் பான் அட்டை பெறுவதற்கு ஆதார் அட்டை யைக் கட்டாயமாக்கும் இந்த சூழ்ச்சி.

**ஆதார், மீப்பெரும் மின்தரவுக் கிடங்குகள், செயற்கை அறிவு துணையுடன் குடிமக்களின் நடத்தையை முன்னறிந்து திசை திருப்புதல், மக்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணித்தல் கட்டுப்படுத்துதல்.. இத்தனை சாத்தியங்கள் அன்று இட்லருக்கு இருக்கவில்லை. இட்லரின் சீடர்களான இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கு இருக்கின்றன.**

ஆதார் அட்டையைக் கட் டாயப்படுத்துவது மற்றும் அதற்காக உயிரியளவு விவரங் கள், கருவிழிப் பதிவு மற்றும் கைரேகைப் பதிவு போன்றவற் றைப் பதிவு செய்வதைக் கட் டாயமாக்குவது என்பது தனி நபர் ஒருவரின் தனியுரிமை யில் (*Privacy*) தலையிடுவதா கும் என்றும், அவ்வாறு செய் வது ஒருவரின் உடலின் மேல் நிகழ்த்தப்படும் அத்துமீறல் என்றும், அது தனிநபர் ஒருவ ருக்கு அவரது உடலின் மேல் உள்ள உரிமையில் தலையிடுவ தாகும் என்றும் தற்போது உச்ச நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்காடி வரும் எதிர்மனுதாரர்கள் வாதிட்டனர்.

தனிநபர் ஒருவரைக் கொல்லும் உரிமையே அர சுக்கு உள்ளது என்றும், கைரேகைகள் மட்டுமின்றி மரபணு மாதிரிகளையும்கூட ஆதார் விவரங்களு டன் இணைக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளதென்றும் வாதிட்டார் முகுல் ரோத்தகி. அதுமட்டுமல்ல, ஒருவ ருக்குத் தன் உடல் மீது இறையாண்மை மிக்க உரிமை உண்டு என்ற வாதமே மோசடியானது (*bogus*) என்கி றார் ரோத்தகி.

ஒரு பெண் தன் உடல் மீது கொண்டிருக்கும் உரி மையை ஒரு ஆண் மீறுவதைத்தான் பாலியல் துன் புறுத்தல் அல்லது வல்லுறவுக் குற்றமாகக் கருது

பள்ளிகளில் வழங்கப்படும் மதிய உணவு சலுகையைப் பெறுவதற்கு ஆதார் அளிக்க வேண்டும் என்ற அரசின் உத்தரவை எதிர்த்து டெல்லி நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.



கிறோம். அவ்வாறு மீறும் உரிமை அரசுக்கு உண்டு என்கிறார் ரோத்தகி. தன் உடல் மீது உரிமை இல்லாத மனிதன் என்பவன் கைதியாக இருக்க வேண்டும் அல்லது அடிமையாக இருக்கவேண்டும். குற்றமிழைத்தவர்கள் அங்க, மச்ச அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டு கைதியாக்கப் படுகின்றனர். தனிநபரைக் கொல்லும் உரிமை என்று ரோத்தகி குறிப்பிடுவது, ஒரு கைதிக்கு மரண தண்டனை விதிக்கும் அரசின் சட்டபூர்வமான அதிகாரத்தைக் குறிக்கிறது.




குற்றவாளி அல்லாத ஒரு குடிமகன், தனது உடல் மீதான அதிகாரத்தை இழக்கிறான் என்றால் அவன் அடிமையாக்கப்பட்டு விட்டான் என்றே பொருள். தமது உடல் மீதான அதிகாரம் மறுக்கப்பட்டவர்கள்தான் ரோமானிய, ஆப்பிரிக்க அடிமைகள். அவர்கள் மட்டுமல்ல, சூத்திர பஞ்சம சாதியினரும்கூட மனு நீதியின்படி தமது உடல் மீதான அதிகாரம் மறுக்கப்பட்டவர்கள்தான். மோடி அரசின் வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்கும் பட்சத்தில் மனுநீதிக்கு இணையான அடிமைச் சாசனமாகவே இந்திய அரசியல் சட்டம் மாறிவிடும்.

**தன் உடல் மீது உரிமை இல்லாத மனிதன் கைதியாக இருக்க வேண்டும் அல்லது அடிமையாக இருக்கவேண்டும். குற்றவாளி அல்லாத ஒரு குடிமகன், தனது உடல் மீதான அதிகாரத்தை இழக்கிறான் என்றால், அவன் அடிமையாக்கப்பட்டுவிட்டான் என்றே பொருள்.**

மாட்டுக்கு ஆதார் அட்டை வழங்கவிருக்கும் மோடி அரசு, மாடுகளிடம் அதற்கு ஒப்புதல் பெறப் போவதில்லை. அதேபோல மனிதர்களிடமும் ஒப்புதல் பெறத் தேவையில்லை என்பதே இந்த அரசின் கருத்து. அரியானா மாநிலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு, பிறந்தவுடனே நம்பர் போட்டால்தான் (ஆதார் எண் பதிவு செய்தால்தான்) பிறப்புச் சான்றிதழே கொடுக்கப்படும் என்றும், இதனை கட்டாயமாகவே அமல்படுத்தி வருகிறோம் என்றும் அரியானா அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் ராகேஷ் குப்தா வெளிப்படையாகவே கூறுகிறார். குழந்தை பிறந்த 7 மணி நேரத்துக்குள்ளேயே அதன் உயிரி அளவு விவரங்கள் பதிவு செய்யப்படும் சட்டவிரோத நடவடிக்கை புகைப்படத்துடன் பத்திரிகைகளில் வெளியாகிறது. தனது ஒப்புதலையோ மறுப்பையோ தெரிவிக்க இயலாத நிலையில் இருக்கும் மனிதக் குழந்தையின் மீது ஆதாரைத் திணிப்பதற்கும், மாட்டின் காதில் ஆதார் அட்டையைக் குத்துவதற்கும் என்ன வேறுபாடு?

விக்கி லீக்ஸ் நவம்பர் 13, 2009-இல் ஆதார் தொடர்பான ஒரு இரகசிய ஆவணத்தை அம்பலப்படுத்தியது. இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்த அடையாள எண்ணை உருவாக்குதல் என்ற தலைப்பிட்ட அந்த ஆவணம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

''அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடனான அந்த நபரின் பரிமாற்றங்கள் முதல் பள்ளிக்கல்வி, தடுப்பூசி போடுதல் முதல் வாக்களித்தல் வரையிலான ஒரு நபரின் எல்லாவிதமான வாழ்க்கை நடவடிக்கைகளையும் ஒரு குறிப்பிட்ட எண்ணுடன் இணைக்க வேண்டுமானால், அந்த எண்ணை (ஆதார் எண்ணை) ஒவ்வொரு குழந்தையின் பிறப்புச் சான்றிதழோடும் இணைத்துவிட வேண்டும். ஏனெனில், பிறப்புச் சான்றிதழ்தான் ஒரு நபரின் அடிப்படையான அடையாள ஆவணம்'' என்று கூறுகிறது.

ஜெர்மனியில் யூதர்கள் அனைவருக்கும் அடையாள எண் இட்ட இட்லரின் நடவடிக்கையோடு இதனை ஒப்பிடுகிறார் இத்தாலியைச் சேர்ந்த தத்துவவியலாளர் ஜார்ஜியோ அகம்பென். 2004-இல் புஷ் அரசு, வெளிநாட்டவர் அனைவரும் தமது கை ரேகையைப் பதிவு செய்தால்தான் அமெரிக்காவுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று உத்தரவிட்டபோது, அதைக் கண்டித்து நியூயார்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் பணியைத் துறந்தவர் அகம்பென்.

கை ரேகை, கருவிழி ரேகை எடுப்பது போன்ற இந்த நடவடிக்கைகளை தோலுக்கு அடியில் பச்சை குத்தும் நடவடிக்கை என்றும், உயிரி அரசியல் பச்சை குத்துதல் (Bio - Political Tattooing) என்றும் சாடும் அகம்பென், குடிமக்கள் அனைவருமே சந்தேகத்துக்குரியவர்களாகவும், சமூகமே ஒரு கண்காணிப்பு முகாமாகவும் மாற்றப்படுவதை சுட்டிக்காட்டுகிறார். இன்று பாதுகாப்புக் காரணங்களுக்காக என்ற பெயரில் நியாயப்படுத்தப்படும் இந்த உயிரி அரசியல் பச்சை குத்தும் நடவடிக்கை, நாளை நல்ல குடிமகனின் அடையாளமாகவும், வழமையான அடையாளப் பதிவு நடவடிக்கையாகவும் சித்தரிக்கப்படும் அபாயத்தைச் சுட்டிக்காட்டி அமெரிக்க மக்களை அன்று எச்சரித்தார்.

ஆதார், மீப்பெரும் மின்தரவுக் கிடங்குகள், செயற்கை அறிவு துணையுடன் குடிமக்களின் நடத்தையை முன்னறிந்து திசை திருப்புதல், ஒடுக்குதல் அல்லது கொல்லுதல், மக்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணித்தல் கட்டுப்படுத்துதல்... இத்தனை சாத்தியங்கள் அன்று இட்லருக்கு இருக்கவில்லை. இட்லரின் சீடர்களான இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கு இருக்கின்றன.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளும் பட்சத்தில், இவர்களை முறியடிப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கவே செய்கின்றன.

● சாக்கியன்

# டாஸ்மாக் உடைப்புப் போராட்டங்கள்:
# மக்கள் அதிகாரத்தின் வெற்றி!

**கடைகள் உடைபடுகின்றன என்பதைக் காட்டிலும், இந்த அரசமைப்பு குறித்த பிரமைகள் உடைபடத் தொடங்கிவிட்டன என்பதே இன்றைய போராட்டங்களின் முக்கியத்துவம்.**

கடப்பாரை ஏந்திய பெண்கள் டாஸ்மாக் கடைகளை இடித்துத் தள்ளுகிறார்கள். பெட்டிபெட்டியாகச் சாராய புட்டிகளை வீதியில் போட்டு உடைக்கிறார்கள். அதிகாரிகள் ஒரு பொட்டல்காட்டுப் புறம்போக்கில் இடம் பிடித்துக் கடை கட்டினாலும், மறுநாளே மக்களால் அது முற்றுகையிடப்படுகிறது. இரவு பகலாக கடை அகற்றப்படும் வரை முற்றுகை தொடர்கிறது. சாராய பாட்டில் லாரிகள் மறித்து விரட்டப்படுகின்றன. கடைக்கு இடத்தை வாடகைக்கு விட முனையும் நபர்களை ஊரே கூடி நின்று எதிர்க்கிறது.

இந்த எழுச்சி இன்று தோன்றியதல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன் நீதிமன்ற உத்தரவின்படி கடையை அகற்று என்று நடத்திய போராட்டத்தில்தான் சசி பெருமாள் மரணமடைந்தார். ஜெயா அரசு நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்படாது என்பதையும், நீதிமன்றமே தனது உத்தரவு மீறப்படுவதைத் தட்டிக் கேட்காது என்பதையும் மக்கள் புரிந்து கொண்ட தருணம் அது. அடுத்த சில நாட்களில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் டாஸ்மாக் கடையை நொறுக்கிய போது, போலீசின் தாக்குதலுக்கு அஞ்சாத அவர்களது உறுதி புதியதோர் பாதையைக் காட்டியது. தமிழகம் முழுவதும் போராட்டங்கள் பற்றிப் பரவத் தொடங்கின. ம.க.இ.க. பாடகர் தோழர் கோவனைத் தேசத் துரோக வழக்கில் கைது செய்தபோது, அரசுக்கு ஆதரவாக வாதாட அ.தி.மு.க. அடிமைகளும் ஆர்.எஸ்.எஸ். பங்காளிகளும் மட்டுமே ஜெயலலிதாவுடன் நின்றனர். 2015-இல் சசிபெருமாள் மரணத்தைக் கொச்சைப்படுத்திய ஜெயலலிதா, ''படிப்படியாகக் குறைத்து, மொத்தமாக மூடுவேன்'' என்று 2016-இல் ஒரு ''போங்காட்டம்'' ஆட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

''மூடு டாஸ்மாக்கை!'' என்ற முழக்கத்தை முன்வைத்துப் புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி தலைமையில் சென்னை-பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டம். (கோப்புப் படம்)



இவையனைத்தும் மெரினா எழுச்சிக்கு முந்தைய நிகழ்வுகள். அதன் பின்புலங்களில் ஒன்று எனவும் கூறலாம். தற்போது நடந்து வரும் மக்கள் எழுச்சி, நடந்து முடிந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தின் வேறொரு வடிவிலான தொடர்ச்சி. நடந்து வரும் போராட்டங்களைக் கவனியுங்கள். போலீசுடன் இழைவதற்கும் வேனில் ஏறியபடி போஸ் கொடுப்பதற்கும் கட்சித்தலைவர்கள் யாரும் இல்லை. அதிகார வர்க்கத்துடன் மக்கள் நேருக்குநேர் பொருதுகிறார்கள். கன்னத்தில் அறைந்தாலும், தடிக்கம்பால் தாக்கினாலும் அடங்காமல் சீறிச் சினந்து வருகிறார்கள். இது அடிக்கு அஞ்சாத போர்க்குணம் மட்டுமல்ல. இந்த போர்க்குணத்தை உள்ளிருந்து கிளர்த்துவது இந்த அரசமைப்பின் மீதான வெறுப்பு. போராட்டக் களங்களில் வெற்றி பெறும் பெண்கள், மக்களின் அதிகாரத்தை நாம் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறோம் என்று உணராமல் இருக்கக்கூடும். ஆனால், தமது அதிகாரம் செல்லாக்காசாகிப் வருவதை அதிகாரவர்க்கம் ஒவ்வொரு கணமும் உணர்ந்து புழுங்கிக் கொண்டிருக்கிறது.

இன்று 3000 கடைகளுக்கு மேல் மூடப்படுவதற்குக் காரணம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது உண்மைதான். எனினும், இதுவே முழு உண்மையல்ல. ''கோயில், பள்ளி, மருத்துவமனைக்கு அருகில் மதுக்கடை கூடாது'' என்ற விதி மீறப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டி, அத்தகைய கடைகளை மூடச் சொல்லி சென்னை உயர் நீதிமன்றம் போட்ட உத்தரவுகள் ஒன்றா, இரண்டா? ஒரு கடையைக்கூட அரசு மூடியதில்லை. நெடுஞ்சாலைக் கடைகளை மூடுமாறு நீதிமன்றம் கூறியபோது, பின்வாசலை முன்வாசலாக்கி, ''இது வேறு கடை'' என்று நீதிமன்றத்துக்குச் சொன்ன அரசு இது. அதையும் வேடிக்கை பார்த்த நீதிமன்றம்தான் இது.

தற்போது மட்டுமென்ன? தீர்ப்பை மீறிக் கடை திறப்பதற்கு தன்னாலான முயற்சிகளையெல்லாம் அரசு செய்து



''மூடு டாஸ்மாக்கை!'' என்ற முழக்கத்தை முன்வைத்து மக்கள் அதிகாரம் அமைப்பு திருச்சியில் நடத்திய சிறப்பு மாநாட்டில் திரண்ட மக்கள் திரளின் ஒரு பகுதி. (கோப்புப் படம்)

தான் பார்த்தது. அரசை முடக்கியிருப்பது, நீதிமன் றத்தின் அதிகாரம் அல்ல, மக்களின் அதிகாரம்! கடப் பாரையும் துடைப்பமும் ஏந்திய பெண்கள்! ''மக்கள் எதிர்ப்பு காட்டும் இடங்களில் நாங்கள் கடை திறக்க முயற்சிக்க மாட்டோம்'' என்று உயர் நீதிமன்றத்தில் வாக்குறுதி அளிக்கிறார் அரசு வழக்கறிஞர். இது மக் கள் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத நிலையில் போடப் படும் யோக்கிய வேடமல்லவா?

வேடம் போடுவது அரசு மட்டுமா? ''மதுக்கடை திறந்திருக்கும் நேரத்தை சற்றுக் குறைப்பதற்காவது உத்தரவிடுங்கள்'' என்று பா.ம.க. வழக்கறிஞர் பாலு 2015-இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் கேட்ட போது, ''அதெல்லாம் அரசின் கொள்கைப் பிரச்சினை, நாங்கள் தலையிட முடியாது'' என்று கூறியது உயர் நீதி மன்றம். இன்றோ ''குடியிருப்புப் பகுதிகளில் கடை வைக்காதீர்கள்'' என்று கொள்கைப் பிரச்சினையில் ''தலையீடு'' செய்கிறது.

பச்சையப்பன் கல்லூரி வாயிலில் வைத்திருந்த மதுக்கடையை ''சட்டவிரோதமானது'' என உயர் நீதி மன்றம் அன்று கண்டிக்கவில்லை. மாறாக, ''சட் டத்தை மாணவர்கள் கையில் எடுத்துக் கொள்ள முடி யாது'' என்று கூறி, அவர்களைச் சட்டவிரோதிகள் ஆக் கியது. கடையை உடைத்த குற்றத்துக்காக கைது செய் யப்பட்ட மாணவனைப் பிணையில் விட வேண்டு மானால், ''50,000 ரூபாய் டாஸ்மாக்கிற்கு இழப்பீடு கட்ட வேண்டும்'' என அன்று உத்தரவிட்டது. இன்றோ சிறை, போலீசு அதிகாரிகளைக் கண்டிக்கிறது.

இந்த மாற்றங்களுக்கு என்னதான் காரணம்? நிச் சயமாக ''சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவேண் டும்'' என்ற அக்கறையோ, ''மக்களின் கருத்துக்கு மதிப் பளிக்க வேண்டும்'' என்ற ஜனநாயகப் பண்போ கார ணமல்ல. தங்கள் அதிகாரம் செல்லுபடியாகவில்லை என்பதனால் இவர்கள் பின் வாங்குகிறார்கள். இப்போ தைக்கு பின்வாங்குவதன் மூலம்தான் தங்கள் அதிகாரத் தின் கவுரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று பதுங்குகிறார்கள். மக்களின் குரலுக்கு மேலே தங்கள் குரலை ஓங்கி ஒலித்துத் தலைப்புச் செய்தியாக்குவதன் மூலம், ''நிலைநாட்டப்படுவது நீதிமன்றத் தின் அதிகாரம்தான்'' என்ற மயக்கத்தை மக் களுக்கு ஏற்படுத்துகிறார்கள்.

கடைகள் உடைபடுகின்றன என்பதைக் காட்டிலும், இந்த அரசமைப்பு குறித்த பிர மைகள் உடைபடத் தொடங்கிவிட்டன என்பதே இன்றைய போராட்டங்களின் முக்கியத்துவம். ''கள்ளச்சாராயம் விற்பவ னிடம் மனுக் கொடுப்பதும், கலெக்டரி டம் கொடுப்பதும் ஒன்றுதான்'' என்று மக் கள் தெளிந்து விட்டார்கள். இந்த அரசதிகா ரத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக கோபுரத் தில் ஏறிக் கூவினாலும் பயனில்லை என்று உணர்ந்து விட்டதனால்தான், அத்தகைய போராட்ட வடிவங்கள் உதிர்ந்து விட்டன.

தமிழகத்தின் தற்போதைய டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டங்களை டில்லியில் நடத்தப்பட்ட விவசாயிகளின் போராட்டத்துடன் ஒப்பிட்டுப் பாருங் கள். அவர்கள் கையாண்ட ''போராட்ட வடிவங்கள்'' விவசாயிகளின் சுயமரியாதையைக் குலைக்கின்ற வகையிலானவை என்பது மட்டுமல்ல, அவையெல் லாம் மோடியின் கவனத்தை ஈர்ப்பதற்கான முயற்சிகள் என்று அவர்கள் கூறிக் கொண்டார்கள்.

விவசாயத்தைப் புறக்கணிப்பதையும் விவசாயியை வாழ விடாமல் அழிப்பதையுமே தனது கொள்கை யாகக் கொண்டிருக்கும் அரசின் ''கவனத்தை ஈர்த்து'' கருணையைப் பெற முயற்சித்த அந்த அணுகுமுறை ஒருபுறம். ''எங்கள் குடியைக் கெடுப்பதுதான் உன் கொள்கை எனும்போது, நாங்கள் ஏன் உன்னிடம் மனுக் கொடுக்க வேண்டும்'' எனக் கேட்டு, மதுக்கடை களை உடைத்தெறிகின்ற தமிழகம் ஒருபுறம்.

இது போராட்ட வடிவம் குறித்த பிரச்சினையல்ல. அரசிடம் பணிந்து மன்றாடப் போகிறோமா - அரசைப் பணிய வைக்கப்போகிறோமா என்பது குறித்த பிரச் சினை. கல்விக்கொள்ளையோ, மணற்கொள்ளையோ, தண்ணீர்க்கொள்ளையோ எதுவும் இந்த அரசின் உறுப் புகளை மீறி நடப்பதல்ல. அனைத்தும் அவற்றால் நடத் தப்படுபவை. முறைகேடுகளே முறையாகிப்போயிருக் கும் சூழல் இது. எனவேதான், முறையீடுகளும் மன் றாட்டங்களும் முட்டுச்சந்துக்கு வந்துவிட்டன.

ஆம். இது முட்டுச்சந்து. கையில் கடப்பாரை ஏந் தியிருக்கும் பெண்கள் மதுக்கடையை மட்டும் தகர்க் கவில்லை. ''இந்த அரசமைப்பின் அதிகாரத்துக்குட் பட்டுத்தான் தீர்வு காண முடியும்'' என்று மக்களின் மூளைக்குள் உருவாக்கப்பட்டிருக்கும் முட்டுச்சந்தை யும் சேர்த்துத் தகர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உல கத்தை மாற்றியமைக்கும் மக்கள், தம் நடவடிக்கை யின் ஊடாக தங்கள் சிந்தனையையும் மாற்றியமைத் துக் கொள்கிறார்கள். அதை அவர்கள் அந்தத் தருணத்தி லேயே உணர்ந்து விடுவதில்லை. பின்னர் உணராமல் இருப்பதுமில்லை.

● மருதையன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2 -ஆம் பக்கத் தொடர்ச்சி



திருப்பூர் முதலிபாளையம் பகுதியில் நடந்துவந்த டாஸ்மாக் கடையை மூடக்கோரி போராடியதோடு, பாருக்குள் புகுந்து மதுபான புட்டிகளை அள்ளிவந்து சாலையில் போட்டு உடைக்கும் பெண்களின் ஆவேசம்.



அரியலூரில் புதிதாக கட்டப்பட்டு வந்த டாஸ்மாக் பார் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட காட்சி.



சேலம்–பெரமனூரில் குடியிருப்புப் பகுதியில் டாஸ்மாக் கடை திறப்பதை எதிர்த்துப் போராடிய பெண்களைத் தாக்கி, கைது செய்யும் போலீசு.



கேளம்பாக்கம் அடுத்த படூரில் திறக்கப்படவிருந்த புதிய டாஸ்மாக் கடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நடுரோட்டில் அமர்ந்து படிக்கும் போராட்டத்தை நடத்திய இரண்டாம் வகுப்பு மாணவன் ஆகாஷ்.





டாஸ்மாக் கடைகள் திறப்பதை நிறுத்தக் கோரும் மனுவை சாதாரணமாக அளிப்பதற்குப் பதிலாக, அதிகார வர்க்கத்தின் புத்திக்கு உறைக்கும் விதத்தில் மனுவோடு தாலி, பூவையும் சேர்த்துக் கொண்டுவந்த காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண்கள். (வலது) செங்கல்பட்டில் பெண்களின் சாலை மறியல் போர்.



திருவண்ணாமலை அருகே டாஸ்மாக் கடையை மூடக் கோரி முற்றுகையிட்டதோடு, அக்கடையின் இரும்புக் கதவுகளைக் கற்களைக் கொண்டு தாக்கி நொறுக்க முயலும் பெண்கள்.



வேலூர் அருகே புதிதாகத் திறக்கப்பட்ட கடைக்குள் புகுந்து மதுபானப் பாட்டில்களை அடித்து நொறுக்கிய பிறகும், அக்கடையைத் திறக்க அதிகார வர்க்கம் முயற்சி செய்ததையடுத்து, அக்கடையை கற்களைக் கொண்டு தாக்கும் பெண்கள்.



மதுரையில் கல்லூரிக்கு அருகே திறப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த டாஸ்மாக் ஷெட்டை, பொதுமக்களும் மாணவர்களும் இணைந்து அடித்து நொறுக்கி அப்புறப்படுத்துகின்றனர்.



சென்னை-தண்டையார்பேட்டையில் சேனியம்மன் கோவில் தெருவில் உள்ள டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்க சுத்தியலுடன் திரண்ட பெண்கள்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

முதலாளித்துவம் கொல்லும்! கம்யூனிசமே வெல்லும்!!

# போராடு... செங்கொடி ஏந்தி போராடு...!



மே 1 2017

**மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கின்ற மறுகாலனியாக்கத்தைத் தகர்த்திடுவோம்! போராடு... ஒன்றிணைந்து, செங்கொடி ஏந்திப் போராடு!** – எனும் முழக்கத்துடன் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள், தோழமை அமைப்புகளுடன் இணைந்து மே நாளன்று சென்னை – ஆவடி, காஞ்சிபுரம், கோவை, திருச்சி, திருவாரூர் ஆகிய இடங்களில் பேரணி-ஆர்ப்பாட்டங்களையும், கடலூரில் பேரணி-பொதுக் கூட்டத்தையும், சென்னை-திருவொற்றியூர், கும்மிடிப்பூண்டி, வேலூர், நெல்லை, தேனி, ஓசூர், கோத்தகிரி ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின.


கடலூரில்...


சென்னை - ஆவடியில்...


தேனியில்...


திருச்சியில்...



கோவையில்...


நெல்லையில்...